பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 11 சனிக்கிழமை 24.04.2021 கதிர் 170

## இது ரகசியம் அல்ல!

மருத்துவ மற்றும் சுகாதார சேவைகளுடன் தொடர்புடைய அன்பர் ஒருவர் எழுப்பிய கேள்வி இது.

யாழ்.ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சைக்கு வந்த ஒரு பொலிஸ்காரருக்கு யாழ்.ஆஸ்பத்திரி நிர்வாகம் நடத்திய

பக்கம்02

# அசுர வேகத்தில் கொரோனாத் தொற்று நேற்று மாத்திரம் 931 பேர் அடையாளம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று திடீரென அசுர வேகத்தில் அதிகரித்துள்ளது.

நேற்று மாத்திரம் 931 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் 99 ஆயிரத்து 653 பேருக்கு இதுவரையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 90 ஆயிரத்து 36 பேர் கொரோனாத் தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்துள்ளனர்.

அதேபோல், நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி 634 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அபாய கட்டத்தில் இலங்கை!



## இம்முறை கொரோனாவை அடக்க மக்களின் ஒத்துழைப்பே வேண்டும் என அரசு கோரிக்கை

இலங்கையில் கொரோனா அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்த மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு எனச் சட்ட விதிமுறைகள் இன்றி மக்களின் ஒத்துழைப்புடன் தற்போதுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்தவே எதிர்பார்க்கின்றோம்.

– இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

2

## யாழில் 3 பொலிஸார் உட்பட மேலும் 12 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம்

2

## திருமலைக்கு வராதீர்கள்! வலியுறுத்துகிறார் ஆளுநர்

(அப்துல்சலாம் யாசீம்)

கொவிட் -19 வைரஸ் பரவும் அபாயத்தை சுகாதாரத் துறை அடையாளம்கண்டுள்ளதால்திருகோணமலை மாவட்டத்திற்கு வருவதைத்தவிர்க்குமாறு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பொதுமக்களிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

வீதித் தடைகளை தவிர்த்து பிற நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் குறைக்குமாறு ஆளுநர் நேற்று பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தினார்.

2

## 5 கிராமங்கள் தனிமைப்படுத்தல் முடக்கப்பட்டது ரயில் நிலையம்

குருநாகல் - கனேவத்தை ரயில் நிலையத்தில், நேற்று நள்ளிரவு முதல் எந்தவொரு ரயிலும் நிறுத்தப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் வேக கட்டுப்பாட்டு மையம் இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

குருநாகல் பகுதியில் கனேவத்தை ரயில் நிலையத்துக்கு அருகிலுள்ள 5 கிராமங்கள், கொரோனாப்

2

## நாட்டை முடக்கும் முடிவு இல்லை ஆனாலும் விழிப்பாக இருங்கள்

### இராணுவத் தளபதி வேண்டுகோள்

வார இறுதியில் நாட்டை முழுமையாக முடக்குவதற்கான எவ்விதமான தீர்மானமும் எட்டப்படவில்லை என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புத்தாண்டுக்கு முன்னர் 150 - 200 வரையான தொற்றாளர்களே அடையாளம் காணப்பட்டனர். எனினும், தற்போது எண்ணிக்கை அதிகரித்துள்ளது. புத்தாண்டு காலப்பகுதியில் ஒரு சிலர் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் செயற்படுவதைக் காணமுடிந்தது. எனவே, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2

## நாடாளுமன்றத்தில் அமைதியின்மை; பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் விசாரணைக் குழு நியமனம்

நாடாளுமன்றத்தில் கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற அமைதியின்மை குறித்து விசாரணை செய்ய பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் எழுவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நேற்று நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகியதன் பின்னர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன இதனை அறிவித்தார்.

கடந்த 21ஆம் திகதி நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், நாடாளுமன்ற வளாகத்திலும் ஏற்பட்ட சம்பவங்கள் குறித்து கண்டறிந்து அதற்கென எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பரிந்துரைகளை முன்வைப்பதற்காக இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்களை தடுக்க மேற்கொள்ள

2

# வீட்டிலிருந்து இருவர் மாத்திரமே வெளியில் செல்வதற்கு அனுமதி

## புதிய சுகாதார அறிவுறுத்தல்கள் வெளியீடு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் தீவிரமடைந்து வரும் நிலையில், பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய புதிய சுகாதார வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோயியல் மற்றும் கொரோனாக் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ இந்தப் புதிய வழிகாட்டல்களை வெளியிட்டுள்ளார்.

2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எழுமாற்றான பி.சி.ஆர்.சோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதனால் அவரை ஆஸ்பத்திரிக்குக் கூட்டி வந்த மற்றொரு பொலிஸ்காரருக்கும் சோதனை நடத்தப்பட்டது. அவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து யாழ்.பொலிஸார் குறித்து அதிக சிரத்தை எடுக்கப்பட்டது. தினசரி நான்கு, ஐந்து என்று பொலிஸாரின் தொற்று முடிவுகள் கிடைத்து வருகின்றன. நேற்றும் கூட மூன்று பொலிஸாருக்குத் தொற்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள் என்றால் போட்டுப்பிடுங்கும் சுகாதாரத் துறையினர் பொலிஸ் நிலையம் தொடர்பில் ஏன் பம்முகின்றனர் என்பது அந்த அன்பரின் கேள்வி.

தொற்று மையங்களில் ஒன்றாக மாறி இருக்கும் யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு மக்கள் சென்று வர அனுமதிக்கலாமா, அங்கு எடுக்கப்பட்ட விசேட தடுப்பு நடவடிக்கைகள் யாது என்றெல்லாம் கேள்விக் கணைகள் எழுகின்றன.

சுகாதாரப் பகுதியினர் மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் நல்லது.

★ ★ ★

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பான உயர்நீதிமன்ற விசாரணைகள் முடிவடைந்து விட்டன. இனி மனுதாரர்களும், எதிர்மனுதாரர்களும், சட்டமா அதிபர் தரப்பும் எழுத்து மூலமான தங்களின் வாதங்களை வரும் செவ்வாய்க்கிழமையன்று சமர்ப்பிக்க வேண்டும். பெரும்பாலும் அடுத்த வார இறுதியில், ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் தனது தீர்ப்பை ஜனாதிபதிக்கும், சபாநாயகருக்கும். எழுத்தில் அனுப்பும். சபாநாயகர் தீர்ப்பை நாடாளுமன்றத்தில் அறிவிப்பார்.

இந்த வழக்கில் ஒரு சுவையான விடயம். ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர, இடையீட்டு மனுதாரராக வழக்குக்குள் நுழைந்தார். பிரபல ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா அவருக்காக முன்னிலையாகினார். முன்னர் பல வழக்குகளில் இப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சார்பாக ஆஜராகியவர். இன்றைய ஆட்சிப் பீடத்தின் வலது கை அவர்.

ஜனாதிபதியின் செயலாளரின் சார்பில் – அரசுப் பக்கம் போல – அவர் நீதிமன்றத்தில் சொன்ன விடயம் தமிழர்களைப் பொறுத்தவரை மிக மிக முக்கியமானதாகின்றது.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக இலங்கைப் பிரஜைகள் மட்டுமே இருக்க முடியும் என்ற எந்த வரையறையும் இந்தச் சட்டமூலத்தில் இல்லை. அதனால் ஆணையாளர்களாக சீன நாட்டவர்கள் நியமிக்கப்படலாம், ஆணைக்குழு முழுமையாக சீன மயமாகலாம் என்றெல்லாம் இந்த வழக்கில் மனுதாரர்கள் சார்பில் குரல் எழுப்பப்பட்டது. ஆகையினால் இந்தச் சட்டத்தில் ஆணையாளர்களாக இலங்கையரே நியமிக்கப்பட வேண்டும் என்ற பிரிவு சேர்க்கப்படுவது அவசியம் என அவர்கள் தரப்பில் வாதிடப்பட்டது.

அதற்குப் பதிலளித்து ஜயசுந்தரவின் சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா வாதாடினார். இலங்கையில் நிறைவேற்றப்படும் சட்டங்களில் இந்தப் பதவிக்கு இலங்கையர்தான் வரவேண்டும் என வரையறையாகக் குறிப்பிடப்படுவதில்லை, அது முறையுமல்ல என்று கூறிய அவர், அதற்கு உதாரணமாக இந்த நாட்டில் பிரதம நீதியரசராக நியமனம் பெற வேண்டியவர் கட்டாயம் இலங்கையராக – இலங்கைப் பிரஜாவுரிமை உடையவராக – இருக்க வேண்டும் என்று எந்தச் சட்டத்திலும் இல்லை, பொதுவாக இலங்கையர் அல்லாத ஒருவரைப் பிரதம நீதியரசர்களாக இங்கு நியமிப்பதில்லை, ஆனால் அப்படி நியமிக்க முடியாது என்பதல்ல, இலங்கைப் பிரஜாவுரிமை இல்லாத வெளிநாட்டவர் கூட இலங்கையின் பிரதம நீதியரசராக நியமிக்கப்படலாம், அதற்கு எந்தக் கட்டுப்பாடும் கிடையாது – என்று பகிரங்கமாக நீதிமன்றத்தில் கூறினார்.

அந்த வாதாட்டத்தை 'லபக்' எனப் பிடித்துக் கொண்ட மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணியான எம்.ஏ.சுமந்திரன், ஆளும் தரப்பில் – ஜனாதிபதியின் செயலாளருக்காக – முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி பகிரங்க நீதிமன்றத்தில் தெரிவித்த இந்தக் கருத்தை உடனடியாகவே பகிரங்கமாக்கி, ட்வீட் செய்தார்.

விடயம் இதுதான். இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் குறித்து விசாரிப்பதற்கு சர்வதேசப் பங்களிப்புடனான நீதிப் பொறிமுறை அவசியம் என வலியுறுத்தும் தமிழர் தரப்பு, இலங்கையின் இறையாண்மைக்கு உட்பட்டதாக அதை முன்னெடுப்பதாயின் பொதுவான சர்வதேச நீதிபதிகளின் முன்னிலையில் இலங்கை நீதிமன்றத்தில் விசாரணைகளை நடத்தலாம் என்றும் கூறுகிறது.

ஆனால், இலங்கை நீதிமன்றங்களில் வெளிநாட்டு நீதிபதிகள், சர்வதேச நீதிபதிகள் பணிபுரிவதற்கு சட்டத்தில் இடமில்லை என்று அப்போது தெற்கில் கூறப்பட்டது.

ஆனால், ஜனாதிபதியின் செயலாளரின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணியே அதை – வெளிநாட்டு நீதிபதிகள், நீதியரசர்கள் இலங்கை நீதிமன்றங்களில் அமர்ந்து பணியாற்ற முடியும், அதற்கு சட்டத் தடை ஏதுமில்லை என்பதை – உறுதிப்படுத்தியிருப்பதால், அது இலங்கைத் தமிழர் தரப்புக்கு மிகச் சாதகமான அறிவிப்பு. அதனால் அந்த அறிவிப்பை 'கப்' என்று பிடித்து வைத்திருக்கின்றார் தமிழர் தரப்பு சட்டத்தரணி சுமந்திரன்.

★ ★ ★

கடந்த வருட முற்பகுதியில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. பொதுத் தேர்தலுக்கு வேட்புமனு ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு கொரோனாத் தொற்று நெருக்கடி ஏற்பட்டது. தேர்தலைக் குறிப்பிட்ட காலத்தில் நடத்த முடியவில்லை. அது தள்ளிப் போயிற்று. ஆறு மாத காலமாக நாடாளுமன்றமே கூட முடியவில்லை. அப்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுமாறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. கொரோனாத் தொற்றைக் கையாள்வதற்கான சுகாதாரச் சட்டவிதிகள் இல்லை, அவற்றை யாப்பதற்காக நாடாளுமன்றைக் கூட்டுங்கள் என்று கோரப்பட்டது. அது நடக்கவில்லை. அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு ஓராண்டு கடந்து விட்டது. தேர்தலும் நடத்தப்பட்டு புதிய நாடாளுமன்றம் கூடி ஆறு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் கொரோனா தொற்றைக் கையாள்வதற்கான சுகாதாரப் பாதுகாப்புச் சட்ட விதிகள் உருவாக்கப்படவேயில்லை. அது இன்றியே குறுக்கு வழிகள் மூலமே விடயங்கள் கையாளப்பட்டு வருகின்றன.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தாமே அவசர பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பில் தனிநபர் சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் நேற்றுச் சமர்ப்பித்துள்ளார்.

'அவசர கால பொதுச் சுகாதார நிலைமை ஒன்றைப் பிரகடனப்படுத்துதல்; பொதுமக்கள் சுகாதாரம் தொடர்பாக அவதானம் செலுத்துவதற்கான விசேட செயன்முறைகளை அங்கீகரித்தல்; மற்றும் அதற்கு இடைநேர் விளைவான விடயங்களை வழங்குவது தொடர்பானதொரு சட்டமூலம்' – என்று அதற்குப் பெயரிடப்பட்டுள்ளது.

பதினாறு பக்கங்களைக் கொண்டது இச்சட்டமூலம். பொதுவாகத் தனிநபர் சட்டமூலம் ஒன்று விவாதத்துக்கு வருவதற்கே ஒரு வருடம் வரைத் தேவைப்படலாம். அத்தோடு தனி நபர் சட்டமூலம் என்பதால் இது சட்டமாவதற்கான வாய்ப்புகள் மிகக் குறைவு. ஆனால், இப்படி ஒரு சட்டம் அவசியம், அது தொடர்பில் தமது ஜனநாயகக் கடமையை சுமந்திரன் ஆற்றியிருக்கின்றார் என்ற இதன் விளைவுகள் ஆளும் தரப்பின் கண்களை சில சமயம் திறக்க வைக்கக் கூடும். திறந்தால் நல்லதுதானே...!

– மின்னல் –

## வீட்டிலிருந்து இருவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய வழிகாட்டல்கள் நேற்று முதல் எதிர்வரும் மே மாதம் 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

★அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் ஒரு வீட்டில் இருந்து இருவருக்கே வெளியில் செல்ல முடியும்.

★பஸ் மற்றும் ரயில் போக்குவரத்தின் போது, ஆசன எண்ணிக்கைக்கு மாத்திரம் பயணிகளை ஏற்றிச் செல்லல்.

★ அரச மற்றும் தனியார் பிரிவுகள் போதிய, குறைந்த ஊழியர்களுடன் வேலைகளைத் தொடரப் பணிப்புரை.

★மாநாடுகள், பயிற்சி நெறிகள் மற்றும் கூட்டங்களைக் கட்டடத்தில் பங்கேகக் கூடிய தொகையில் 50 வீதமானோரது பங்குபற்றலுடன் நடத்துதல்.

★அனைத்து விற்பனை நிலையங்களிலும் 1.5 மீற்றர் இடைவெளியைப் பேணி, சுகாதார வழிகாட்டல்களுடன் விற்பனை நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

★பொதுமக்கள் ஒன்றுகூடல்கள் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

★மரணங்களின்போது 25 பேரின் பங்கேற்புடன் இறுதிச் சடங்கை மேற்கொள்ளல்.

★மத ஸ்தலங்களில் 50 பேருக்கு மாத் திரம் அனுமதியோடு, கூட்டு நடவடிக்கைகளுக்குத் தடை.

★பல்கலைக்கழகங்கள் உட்பட உயர் கல்வி நிலையங்களை முழுமையாக மூடுமாறு உத்தரவு.

★தனியார் மற்றும் மேலதிக வகுப்புகளுக்கும் தடை.

★பாடசாலைகள் மற்றும் ஆரம்ப பாடசாலைகளை 50 வீத மாணவர்களுடன் நடத்த பணிப்புரை.

---

## பிரதி சபாநாயகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரைக்கும் பொறுப்பு இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழுவில் அமைச்சர்களான சமல் ராஜபக்ஷ, கெஹலிய ரம்புக்வெல, இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்ஷன யாப்பா, இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் ஏனைய அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## யாழில் 3 பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பனவற்றில் 636 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே, 12 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது.

கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கைதடி அரச திணைக்களம் ஒன்றின் அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவர் நேற்றுமுன்தினம் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டார். அவரது குடும்ப உறுப்பினர்கள் நால்வருக்கு நேற்று தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மூவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவர்கள் திருநெல்வேலி பாரதிபுரம் தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்கள்.

அத்துடன் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலும் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது – என்றார்.

## அபாய கட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாப் பரவல் தொடர்பான நேற்றைய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் குறிப்பிடுகையில்–

நாடு தற்போது அபாய நிலையிலுள் ளது. எனவே அதற்கு முகங்கொடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதற்கான சகல வேலைத்திட்டங்களும் அரசு, சுகாதார அமைச்சு, ஏனைய சுகாதார தரப்புக்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் எத்தகைய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

ஜேர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில்கூட தற்போது கட்டுப்படுத்த முடியாதளவுக்கு வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளது.

எமது அயல் நாடாள இந்தியாவிலும் இதே நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் காணப்பட்டதைவிட தற்போது உருமாறிய வைரஸ் பரவலே இதற்கான காரணமாகும். இது எமக்கு ஏற்பட்டுள்ள சவாலாகும்.

எனவே, இந்தச் சவாலுக்கு முகங்கொடுப்பதற்கு ஒவ்வொரு பிரஜையும் தனது கடமையைச் சரியாக நிறைவேற்ற வேண்டும்.

இம்முறை தனிமைப்படுத்தல், ஊரடங்குச் சட்டம் அல்லது போக்குவரத்து கட்டுப்பாடு என்பவற்றை விதித்து சட்டத்தின் மூலமாக அன்றி, முழுமையாக மக்களின் ஒத்துழைப்புடன் நிலைமையைக் கட்டுப்படுத்துவதே எமது எதிர்பார்ப்பாகும் – என்றார்.

---

## திருமலைக்கு வரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை திருகோணமலையில் விசேட பாதுகாப்பு திட்டத்தை எதிர்காலத்தில் செயல்படுத்துமாறும் ஆளுநர் பாதுகாப்பு படையினருக்கு அறிவுறுத்தினார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறும் அனைவர் தொடர்பிலும் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு ஆளுநர் அனுராதா யகம்பத் பாதுகாப்பு படையினருக்கு இதன்போது உத்தரவிட்டார்.

திருகோணமலை மாவட்டத்தில் சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ள கோமரங்கடவல மற்றும் பதவிஸ்ரீபுர பகுதிகளில் இருந்து திருகோணமலைக்கு வருபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

சிறுநீரக நோயாளிகளுக்கு கொவிட் – 19 தொற்றுப் பரவல் மிக வேகமாக இருப்பதை சுகாதாரத் துறை வெளிப்படுத்தியுள்ளதால் ஆளுநர் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

---

## 5 கிராமங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரவலினால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## நாட்டை முடக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டை முழுமையாக முடக்கும் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. எனினும், வீண் பயணங்களைத் தவிர்த்து வீடுகளிலேயே இருக்குமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். சுற்றுலா செல்லும் திட்டங்கள் இருந்தால் அதனை நிறுத்துங்கள்.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் பட்சத்தில் அந்தப் பகுதி மட்டும் தனிமைப்படுத்தப்படும் – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன், சுமந்திரனின் பிரஜாவுரிமையை நீக்கி மீண்டுமொரு பிரபாகரனை உருவாக்கும் முயற்சியா?



## ஹிட்லர் பாணியிலான அரசாங்கத்தின் விருப்பம் இதுதானா என்கின்றார் சஜித்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர். சம்பந்தனின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி வடக்கு மக்களுக்கு அரசாங்கம் எதை சொல்லப்போகின்றது? சுமந்திரனுக்கு இன்றும் சர்வதேச புலி பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. ஒற்றையாட்சிக்கு ஆதரவாகச் செயற்படும் ஒரு தலைவர் சுமந்திரன். ஜனநாயக முறை சரியில்லை, மீண்டும் ஆயுதம் தூக்குங்கள் என்றா தெரிவிக்கப்போகின்றீர்கள்? மேலுமொரு பிரபாகரனை உருவாக்கப்போகின்றீர்களா? இவ்வாறு கேள்வி எழுப்பினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற 2015 முதல் 2019 நவம்பர் மாதம் 19ஆம் திகதிவரையான காலத்தில் இடம்பெற்ற அரசியல் பழி வாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஆனால் ஏப்ரல் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க எந்த முயற்சியையும் மேற்கொள்வதில்லை. அத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்குவர வழிசமைத்த சஹ்ரானின் படங்களைக் காட்சிப்படுத்தி நாடாளுமன்றத்தில் கொண்டாடியுள்ளனர்.

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மூலம் அரசாங்கம் தனது அரசியல் விரோதிகளை இல்லாமலாக்கத் திட்டமிட்டிருக்கின்றமை தெளிவாகின்றது.

ஜனாதிபதி ஹிட்லர் போன்று செயற்படவேண்டும் என அரசாங்கத்தில் இருக்கும் சிலர் தெரிவிக்கின்றனர். ஹிட்லர் அன்று ஓர் இரவில் தனது அரசியல் விரோதிகள் அனைவரையும் இல்லாமலாக்கி இருந்தார். அதேபோன்று இந்த அரசாங்கம் ஓர் அறிக்கை மூலம் தனது அரசியல் விரோதிகளை இல்லாமலாக்கத் திட்டமிட்டிருக்கின்றது.

மேலும் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கப்போவதாகத் தெரியவருகின்றது.

எதிர்க்கட்சியில் இருக்கும் ஒரு தலைவர் தான் அனுரகுமார திஸாநாயக்க. அவரின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி அவரது அரசியல் நடவடிக்கையை நிறுத்த முடியாது.

அதேபோன்று ஆர். சம்பந்தனின் பிரஜா உரிமையை இல்லாமலாக்கி வடக்கு மக்களுக்கு அரசாங்கம் எதை சொல்லப்போகின்றது. ஜனநாயக முறை சரியில்லை, மீண்டும் ஆயுதம் தூக்குங்கள் என்றா தெரிவிக்கப்போகின்றீர்கள்? மேலுமொரு பிரபாகரனை உருவாக்கப்போகின்றீர்களா?

மேலும் சுமந்திரனுக்கு இன்றும் சர்வதேச புலி பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. ஒற்றையாட்சிக்கு ஆதரவாகச் செயற்படும் ஒரு தலைவர். அவரது பிரஜா உரிமையை இல்லாமலாக்கி பிரபாகரன் போன்றவர்களை உருவாக்குவதா அரசாங்கத்தின் திட்டம்.

அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைவராக ரவூப் ஹக்கீம் ஒரு நடுநிலையான ஜனநாயக தலைவர். முஸ்லிம் அடிப்படைவாதிகள் தொர்பில் அரச தரப்பினர் அதிகம் கதைக்கின்றனர்.

ரவூப் ஹக்கீம் போன்ற தலைவரது பிரஜா உரிமையை இல்லாமலாக்கி, சஹ்ரான்களை உருவாக்கப் போகின்றீர்களா? அதேபோன்று ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டில் பல தடவைகள் பிரதமராக செயற்பட்ட தலைவர். அவரது பிரஜா உரிமையை இல்லாமாக்குவதன் நோக்கம் என்ன?

அதேபோன்று எதிர்கட்சியில் இருக்கும் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள்தான் 2015 அரசாங்கம் உருவாகுவதற்கு பிரதான சூத்திரதாரிகளாவர்.

அதனால் தான் அவர்களை பழிவாங்கும் நோக்கில் அவர்களது பிரஜா உரிமையை இல்லாமலாக்க அரசாங்கம் முயற்சிக்கின்றது.

ஆனால் ஏப்ரல் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை கண்டுபிடிக்க அரசாங்கம் முயற்சிப்பதில்லை. அதற்கு மாறாக சஹ்ரான் உட்பட குழுவின் படத்தை நாடாளுமன்றத்தில் காட்சிப்படுத்தி கொண்டாடினார்கள். இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வருவதற்கு வழிசமைத்தமைக்காக இவர்கள் சஹ்ரானை கொண்டாடினார்கள்.

மேலும் ஏப்ரல் தாக்குதலின் சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்க கடும் முயற்சியுடன் செயற்பட்ட பொலிஸ் அதிகாரி ஷானி அபேசேகரவுக்கு இந்த அரசாங்கம் தண்டனை வழங்கி இருக்கின்றது. அரச அதிகாரிகளை இவ்வாறு செயற்படுத்தும்போது பொலிஸ் அதிகாரிகள் எவ்வாறு நேர்மையாகச் செயற்படமுடியும்?

அதேபோன்று நீதிமன்ற அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு எடுத்துக்கொண்டு வழக்குத் தீர்ப்புகளை மாற்றியமைக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையால் நாடு சர்வதேச ரீதியில் நகைப்புக்குள்ளாகின்றது. அரசாங்கத்தின் இவ்வாறான முட்டாள்தனமான நடவடிக்கைகள் காரணமாகத்தான் மனித உரிமை ஆணைக்குழுவால் எமது நாடு தற்போது கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

சர்வதேச நீதிமன்றம் அமையும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. எமது நாட்டின் உள்ளக பிரச்சினைகளை சர்வதேசத்துக்கு கொண்டு செல்ல நாங்கள் ஒருபோதும் நடவடிக்கை எடுக்கமாட்டோம். ஆனால் நாட்டின் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகள் இடம்பெறுமானால், அதன் காரணமாக சர்வதேச நீதிமன்றம் அமைவதை எங்களால் தடுக்கவும் முடியாது.

எனவே ஆட்சி மாற்றங்கள் ஏற்படும்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் எதிர்க்கட்சிகளை பழிவாங்கும் கலாசாரத்தை இல்லாமலாக்கவேண்டும். அதுவே எமது கட்சியின் கொள்கையாகும்.– என்றார்

## விலங்குகளின் தீவன பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்குக

கோழி இறைச்சிக்கு ஒரு கட்டுப்பாட்டு விலையை விதித்த அதே வழியில் விலங்குகளின் தீவனத்திற்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்து இலங்கை சிறு மற்றும் நடுத்தர அளவிலான கோழி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக விலங்குகளுக்கு பெற்றுக் கொடுக்கும் உணவுகளின் விலைகள் உயர்ந்து வருவதால் சிறு மற்றும் நடுத்தர கோழி வர்த்தகர்கள் பல சிக்கல்களை எதிர்கொள்கினறனர் என அதன் தலைவர் மைத்திரி பொன்சேகா தெரிவித்தார்.

ஏப்ரல் மாதத்திற்குள், விலங்குகளின் தீவனம் மட்டும் 30 சதவீதம் அதிகரித்துள்ளது என அவர் கூறினார்.

விலங்குகளின் தீவனத்துக்கு ஒரு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படாவிட்டால், பெரிய அளவிலான நிறுவனங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும், மேலும் அனைத்து சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களும் அழிவடையக்கூடும் என்று அவர் எச்சரிக்கை விடுத் துள்ளார்.

## வைத்தியசாலைக்கு சென்று ஹரினை சந்தித்தார் சஜித்



சுகவீனம் காரணமாக கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நலம் விசாரிக்க சென்றுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்மனுஷ நாணயக்கார உள்ளிட்டோர் ஹரின் பெர்னாண் டோவை பார்க்கச் சென்றனர்.

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் ஆளும், எதிர்த்தரப்பின ருக்கிடையில் கடும் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையில், மறுநாள் வியாழக்கிழமை ஹரின் பெர்னாண்டோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

## மன்னார் மாவட்டத்துக்குக் கீதம்: கலைஞர்களிடம் ஆக்கங்கள் கோரல்!



மன்னார் மாவட்டத்துக்கான கீதம் வடிவமைப்பதற்கு மாவட்டக் கலைஞர்கள் மற்றும் கலை ஆர்வமுடையவர்களிடம் இருந்து ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் பல்வேறு சிறப்பம்சங்களை எடுத்துக்கூறும் வகையில் மாவட்ட கீதம் வடிவமைப்பதற்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன என மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டி மேல் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக, மாவட்டத்துக்கே உரித்தான வரலாற்றுத் தடயங்கள் மற்றும் அதன் சிறப்பம்சங்களை எடுத்தியம்பும் வகையில் மூன்று தொடக்கம் நான்கு நிமிடங்களுக்குள் இசைக்கக் கூடியதாக கீதம் அமைய வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், எழுத்துப் பிரதியாகவோ அன்றி இசையமைத்து இறுவட்டு வடிவிலோ கீதத்தைச் சமர்ப்பிக்க முடியும் என அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதன்படி, ஆக்கங்கள் அனைத்தும் எதிர் வரும் மே 31ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட செயலாளர், மாவட்டச் செயலகம், மன்னார் என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடிய வகையில் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா வைரஸ் நாட்டுக்குள் நுழைவதை தடுக்க நடவடிக்கை

விமானப் பயணிகளின் மூலம் கொரோனா வைரஸ் நாட்டிற்குள் நுழைவதைத் தடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

விமானப் பயணிகள் ஒன்றிணைவதை தடுப்பதற்கான விசேட வேலைத்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சகல விமானப் பயணிகளும் சுகாதார சட்டங்களை பின்பற்றுகின்றமை அவசியமாகும்.

அத்தியாவசிய விமானப் பணி



யாளர்களை மாத்திரம் இன்று தொடக்கம் சேவைக்கு அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேலும் தெரிவித் துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தீவிரத்துடன் திரிபடைந்த வைரஸ்?

நாடெங்கும் பல்வேறு பிரதேசங்களில் திடீரெனக் கொரோனாத் தொற்று வீதம் – பரவல் வேகம் – எகிறியிருக்கின்றது.

இதுவரை இலங்கையில் பரவிய கொரோனா வைரஸையும் விட வேறு விதமான – திரிபடைந்த – புதிய ரக கொரோனா வைரஸ் இப்போது பரவுவதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

அமெரிக்கா, பிரிட்டன், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இந்தத் திரிபடைந்த கொரோனா வைரஸ் தனது கைவரிசையைக் காட்டி வருகின்றது. அதுவே இலங்கையிலும் பல இடங்களிலும் பரவுகின்றதா என்ற சந்தேகம் சம்பந்தப்பட்ட நிபுணர்களுக்கு. தொற்றைக் கண்டறிய நடத்தப்படும் வழமையான பி.சி.ஆர். பரிசோதனை வெறுமனே கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை மட்டுமே உறுதிப்படுத்தும். அந்தத் தொற்றை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் வகை எத்தகையது என்பதை அந்தச் சோதனை மூலம் வித்தியாசப்படுத்தி அறியவே முடியாது.

அதனால், இதற்கான விசேட ஆய்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க நிபுணர்கள் முடிவு செய்துள்ளனர்.

அதன்படி –

கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் கல உயிரியல் மையம் இந்த ஆய்வை முன்னெடுக்கவுள்ளது.

நாட்டில் பல பகுதிகளில் இருந்தும் தொற்றாளர்களின் மாதிரிகளைப் பெற்று இந்த அமைப்பு ஆய்வு செய்யும்.

பெரும்பாலும் இந்த ஆய்வு வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பரிசோதனை மூலம் தொற்றை ஏற்படுத்தும் வைரஸின் வகைகளை குறுகிய காலத்தில் அடையாளம் காணமுடியும் என மேற்படி ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் கல உயிரியல் மையத்தின் பணிப்பாளர் சந்திம ஜீவந்தர தெரிவிக்கின்றார்.

அமெரிக்கா, பிரிட்டன், தென்னாபிரிக்க நாடுகளில் பரவும் திரிபடைந்த வைரஸ்தான் இலங்கையிலும் தற்போது தன் கைவரிசையைக் காட்டுகின்றது என்றால் நிலைமை விபரீதம் என்பது தான் அர்த்தம். அது வீரியம் கொண்ட ஒரு கொரோனா வைரஸ் வகை. தொற்று வீதமும் மிதமிஞ்சியதாக இருக்கும், அதன் பாதிப்பும் மோசமானதாக இருக்கும். அதிக தொற்று எண்ணிக்கையையும் உயிரிழப்புப் பாதிப்பையும் அது தரக்கூடும்.

அந்த வைரஸ்தான் பரவுகின்றதா, இல்லையா என்ற கிலிகொள்ள வைக்கும் சிக்கலுக்கு இன்னும் மூன்று, நான்கு நாள்களில் விடை கிடைக்கும்போதுதான், அந்த நிலைமையை எவ்வாறு எதிர்கொள்வது, எப்படிக் கையாள்வது என்பதை நாம் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

எனினும், தற்போதைய பரவல் வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டையே சில தினங்களுக்கு முடக்க வேண்டும் என்று சுகாதாரத் தரப்புகள் வற்புறுத்துகின்றன. குறைந்த பட்சம் நான்கு நாள்களுக்காவது முழு நாட்டையுமே முடக்கி நடவடிக்கை எடுக்குமாறு பொது சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண கூறியுள்ளார்.

ஆனால் அதனை செவிமடுக்கும் பாங்கில் அரசுத் தலைமை – ஆட்சிப் பீடம் – இல்லை என்றே தெரிகின்றது.

நேற்றுக் காலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற – கொவிட் தொற்றுப் பரவலைத் தடுக்கும் ஜனாதிபதி செயலணியின் – கூட்டத்தில் இவ்விடயம் குறித்து விரிவாக ஆராயப்பட்டிருக்கின்றது.

எனினும், எந்த வகையிலும் நாட்டை முடக்குவதற்கோ, அபிவிருத்திப் பணிகளை இடைநிறுத்தி வரையறுப்பதற்கோ இடமளிப்பதில்லை என்ற கருத்தில் அங்கு முடிவு எட்டப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

ஏதேனும் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை சடுதியாக உயருமானால் அந்தப் பிரதேசம் மட்டுமே கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகுமே தவிர, நாட்டை முடக்கும் எண்ணமோ, வேறு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் திட்டமோ கிடையாது என இராணுவத் தளபதியும், கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வாவும் கூறியிருக்கின்றார்.

நாடு எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி, அந்நிய செலாவணிச் சிக்கல், உற்பத்தி பாதிப்புகள், பண வீக்கம் போன்ற இன்னோரன்ன நெருக்கடிகள் கழுத்தை நெருக்குவனவாக இருப்பதன் காரணமாக நாட்டை முடக்குதல் என்ற பேச்சுக்கே இடமளிப்பதில்லை என்ற தீவிரத்தில் அரசுத் தலைமை உள்ளது.

ஆனால், இப்போது நமது தேசத்தைத் தாக்கி வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் திரிபடைந்த, வீரியம் மிக்க ஆபத்தான ரகத்தைச் சேர்ந்தது என்றால், அதை எதிர்கொள்ளும் விதம் குறித்து புதிய வியூகங்களை அரசு வகுக்க வேண்டிவரும். அப்போது நாட்டை மீண்டும் முடக்குவது கூட தவிர்க்க முடியாததாகலாம்.

# ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரத்தில் தற்போது சூழ்ச்சி அரங்கேறி வருகின்றது

## இராதாகிருஷ்ணன் தெரிவிப்பு



ஆயிரம் ரூபா சம்பள உயர்வு விவகாரத்தில் தற்போது சூழ்ச்சித் திட்டம் அரங்கேறி வருகின்றது. கம்பனிகளுடன் இணைந்து தொழிலாளர்களின் தொழில் சுமையை அதிகரிப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அழுத்தம் கொடுத்து வருகின்றது – என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கலாநிதி வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள்சம்பளமாக ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும், உயர்நீதிமன்ற தீர்ப்பு வெளியான பின்னர் தொழில் உரிமைகள் தொடர்பில் முடிவெடுக்கப்படும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்தது.

அது மட்டுமல்ல தொழில் சுமைகள் எதுவும் அதிகரிக்கப்படாமலேயே ஆயிரம் ரூபா சம்பள உயர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டது எனவும் அறிவிப்பு வெளியானது. ஆனால் சம்பள உயர்வு விவகாரத்தில் இன்று சூழ்ச்சி இடம்பெற்றுவருகின்றது.

ஒருநாள்பெயருக்கு 18 கிலோகொழுந்தே பறிக்கவேண்டும். அந்த அளவை 20 கிலோவாக அதிகரிப்பதற்கு கம்பனிகள் முயற்சித்து வருகின்றன. தொழிலாளர்களையும் வற்புறுத்துகின்றன. இந்நிலையில் தோட்டத் தலைவர்களை அழைத்து, 20 கிலோ பறிக்குமாறு இ.தொ.கா. அழுத்தம் கொடுத்துள்ளது. எனவே, தோட்டக் கம்பனிகளுடன் மீண்டும் உறவு வைத்து இ.தொ.கா. இவ்வாறு செய்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

நீதிமன்ற தீர்ப்பு வெளியான பின்னர் மேலதிக கொழுந்துக்கான கொடுப்பனவு தொடர்பாக முடிவு எடுக்கப்படும் என தோட்டக் கம்பனிகள் கூறின.

இன்று மாறுபட்ட கருத்தை முன்வைத்து வருகின்றன. 20 கிலோ கொழுந்தை பறிக்குமாறு தொழிலாளர்களை கம்பனிகள் நிர்ப்பந்தித்து வருகின்றன. இதனால் மக்களும் குழம்பிபோயுள்ளனர். அடுத்த மாதம் 5 ஆம் திகதி நீதிமன்ற தீர்ப்பு வெளிவரவுள்ளது. அதன்பின்னர் நாம் அடுத்தகட்ட நடவடிக்கையை எடுப்போம்.

தற்போது எடுக்கப்படும் 18 கிலோவுக்கு மேல் கொழுந்து பறிக்கவேண்டாம் எனத் தொழிலாளர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். தொழிலாளர்களுக்காக அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைய வேண்டும். – என்றார்.

# இராணுவத்துக்கு எதிரான வழக்குத் தள்ளுபடியானது

பொதுமக்களின் நிலங்களை வலுக்கட்டாயமாக கைப்பற்றி பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டதாக குற்றம் சுமத்தி இராணுவத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஹற்றன் நீதிவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஹற்றன், கொட்டகலை பகுதியில் 581 படைப்பிரிவு நிறுவப்பட்டபோது, இராணுவம் பொதுமக்களுக்கு சொந்தமான நிலங்களை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றி, அப்பகுதியில் அமைதிக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தி குறித்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் இரு தரப்பினரின் சமர்ப்பணங்களை பரிசீலித்த பின்னர், இந்த வழக்கின் பிரதிவாதி இராணுவம் என்றும், அரச பிரிவான இராணுவத்திற்கு எதிரான குற்றச்சாட்டை வாதிகள் நிரூபிக்கவில்லை என்றும் நீதிவான் என்.படபெந்திகே தெரிவித்தார்.

# மூக்குக் கண்ணாடி வழங்கல்

கிளிநொச்சி, ஏப்.24

மானிப்பாய்வட்டம், மன்னார், கிளிநொச்சி மற்றும் மல்லாவி லயன்ஸ் கழகங்கள் ஒன்றிணைந்து கொச்சிகடை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தும் 'கண்ணுக்கு முதலிடமளிக்கும் சேவைத்திட்டம்' நாளை காலை 8.30 மணி முதல் பூநகரி மத்திய விளையாட்டு மைதானத்தில் அமைந்துள்ள கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

பூநகரி வாழ் நலிவுற்ற மக்களுக்கு கண் பரிசோதித்து வாசிப்பதற்குரிய மூக்குக் கண்ணாடி வழங்கப்படும். வருகை தரும் அனைவரும்சுகாதாரவிதிமுறைகளைகடைப்பிடித்து வருகை தர வேண்டும்.

# பூகோள அரசியலில் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள நேரிடும் என்கிறார் மங்கள



கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே நிறைவேற்றப்பட்டால், பூகோள அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களை இலங்கை எதிர்கொள்ள நேரிடும் என்று முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.

அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இது தொடர்பாக மங்கள சமரவீர அவரது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

அப்பதிவில்அவர்மேலும்கூறியிருப்பவை வருமாறு: –

கொழும்பு துறைமுகநகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலம் தற்போதைய வடிவத்திலேயே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாக இருந்தால், கடன் நிதிநெருக்கடிகளையும் பூகோள அரசியல் ரீதியான அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியேற்படலாம்.

அதுமாத்திரமன்றி நிதி ரீதியான மோசடிகள் இடம்பெறுவதற்கான ஒரு மத்திய நிலையமாகக் கொழும்பு மாற்றமடையும். அதற்குப் பதிலாக உண்மையிலேயே நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான முன்னேற்றமடைந்த பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளின் முதலீடுகளை இழக்கவேண்டிய நிலையேற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசாயன உரங்களின் இறக்குமதிக்குத் தடை

## கோட்டா அதிரடி முடிவு



இரசாயன உரங்களை இறக்குமதி செய்வது மிக விரைவில் முற்றாக நிறுத்தப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சலை பெற முடியும். குளங்கள், கால்வாய்கள் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதால் உயிரினங்களுக்கு ஏற்படும் சேதத்தை அந்த இலாபத்தால் ஈடு செய்ய முடியாது. இரசாயன உரங்களின் தாக்கம் சிறுநீரக நோய் உட்பட பல தொற்றா நோய்களுக்கு வழி வகுத்துள்ளது என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிகிச்சைக்காக செலவாகும் தொகை மற்றும் உயிர்களுக்கு ஏற்படும் தாக்கம் அதிகம். ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த பிரஜையை உருவாக்குவதற்கு, நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக நாட்டின் விவசாயத் துறையில் சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கு பழக்கப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க சபைகளின் தலைவர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். நாட்டில் சேதன உர உற்பத்தியை அதிகரிக்க அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும். உர மானியத்திற்கு பதிலாக சேதன உரத்தை பெற்றுக்கொடுக்க திட்டமிடுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

உர இறக்குமதிக்காக ஆண்டுதோறும் செலவிடப்படும் 40 கோடி டொலர்கள் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட முடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். தன்னை அதிகாரத்திற்கு தெரிவு செய்ததன் மூலம் மக்கள் கொள்கை சார்ந்த மாற்றத்தை எதிர்பார்த்தனர். நாட்டிற்காக அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற அனைவரின் ஆதரவும் தேவை என்று ஜனாதிபதி கூறினார்.

எதனோல் இறக்குமதி முழுமையாக நிறுத்தப்பட்டதன் மூலம் இலங்கை சீனி நிறுவனம் ரூ. 110 கோடியை இலாபமாக பெற்றுள்ளது. சுமார் 20 ஆண்டுகளாக சாதாரண மற்றும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் சுமார் 2 ஆயிரத்து 500 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கவும் பதவி உயர்வு மற்றும் போனஸ் ஆகியவற்றைப் பெறவும் முடிந்தது என்று இலங்கை சீனி நிறுவனத்தின் தலைவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி முன்னெடுத்து வரும் நிகழ்ச்சித் திட்டத்தால் நட்டத்தில் இயங்கிய பல நிறுவனங்களை இலாபகரமான நிறுவனங்களாக மாற்ற முடிந்தது என்று தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

நிறுவனங்கள் அடைய வேண்டிய இலக்குகள் தொடர்பில் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை திட்டத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அமைச்சரவை, இராஜாங்க அமைச்சுகளுக்கு தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் அடைய வேண்டிய முன்னேற்றம் ஆகியவை பற்றி தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

கூட்டுப் பொறுப்புடன் பணியாற்றி மக்கள் விரும்பும் கொள்கை மாற்றத்தை அடைய அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஜனாதிபதி தலைவர்களிடம் கூறினார். ஜனாதிபதியின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகல ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# சஹ்ரானின் போதனைகளில் பங்கேற்ற மேலும் மூவர் குளியாபிட்டியவில் கைது

தீவிரவாதி சஹ்ரான் ஹாசிமின் போதனைகளில் பற்கேற்ற மேலும் மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் குளியாப்பிட்டி - கெக்குன கொல்ல பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சஹ்ரான் ஹாசிம் உள்ளிட்ட தரப்பினரால் 2018ஆம் ஆண்டு பல பகுதிகளில் பயங்கரவாதம் தொடர்பான வகுப்புகள் நடத்தப்பட்டன எனவும், அதில் பங்கேற்றவர்கள் ஆண்கள் பெண்கள் என அனைவரும் கைது செய்யப்பட்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# பாகிஸ்தானுக்கு திடீரென படையெடுத்த இலங்கையின் மூத்த பௌத்த பிக்குகள்

கொழும்பு, ஏப்.24

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானின் பௌத்த மத சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான திட்டத்தினூடாக, இலங்கையைச் சேர்ந்த மூத்த பௌத்த பிக்குகள் அடங்கிய உயர்மட்டக்குழு 2021 ஏப்ரல் 19 முதல் 26 வரை பாகிஸ்தானுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமரை சந்திப்பதோடு, இத்தூதுக்குழுவினர் டாக்ஸிலாவில் உள்ள காந்தாரா நாகரிகத்தின் புகழ்பெற்ற பாரம்பரிய இடங்களையும், மர்தானில் உள்ள ஸ்வாட் மற்றும் தக்த் – இ – பாஹியையும் பார்வையிடவுள்ளனர்.

மேலும் லாகூர் மற்றும் இஸ்லாமாபாத்தில் உள்ள பல்வேறு வரலாற்று மற்றும் தொல்பொருள் அற்புதங்களையும் பார்வையிட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் பிரதமரின் அண்மைக்கால இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து, பாகிஸ்தானுக்கான மத சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கும், பாகிஸ்தான் மற்றும் இலங்கை மக்களிடையேயான தொடர்புகளை மேம்படுத்துவதற்கும் இலங்கையிலுள்ள பாகிஸ்தான் உயர் தூதரகம் உயர்மட்ட பௌத்த பிக்குகளின் விஜயத்தை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) முஹம்மத் சாத் கட்டாக், 2021 ஏப்ரல் 19 கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தனிப்பட்ட முறையில் தூதுக்குழுவைச் சந்தித்ததோடு இந்த விஜயத்தை மேற்கொள்வதற்காக மூத்த பௌத்த பிக்குகள் காட்டிய ஆர்வத்தையும் பாராட்டினார்.

# உலக பூமி தினத்தில் நல்லூர் பிரதேச சபை அழகுபடுத்தல் வேலைத்திட்டம் ஆரம்பிப்பு!

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட செம்மணி வீதியில் உள்ள பனை மரங்களை அழகுபடுத்தும் வேலைத் திட்டம் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து வைக்கப் பட்டது.

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மயூரன் தலைமையில் பனைமரங்களை அழகுபடுத்தும் வேலைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச சபையில் நல்லூர் பிரதேச சபைக் குட்பட்ட பகுதியினை அழகுபடுத்துவதற்கென 1 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் எனி னும் நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியை அழகு படுத்தும் வேலைத்திட்டம் மிக விரைவில் ஆரம்பிக்கப்பட வுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்கள்.

# திருமலையில் ஒரு மாத காலத்தில் அதிக தொற்றாளர்கள் அடையாளம்

## மாவட்ட பிரதி பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் தகவல்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த ஒரு மாத காலப்பகுதியில் அதிகளவிலான கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர் எனத் திருகோணமலை மாவட்ட பிரதி பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வி. பிரேமானந்த் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 310 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். குறிப்பாக உப்பு வெளி மற்றும் திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிகளவிலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டார்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

விஷேடமாக 24 மணித்தியாலங்களில் உப்புவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 17, திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15, தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3, மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 1, குச்சவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 1, கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 9 அடங்கலாக திருகோணமலை மாவட்டத்தில் 46 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 2 பாடசாலைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு கொரோனாத் தொற்று அடையாளங்காணப்பட்டுள்ளது. அதனால் அப்பாடசாலைகளில் மாணவர்களது வருகை குறைவாகக் காணப்படுவதால் குறித்த பாடசாலை நிர்வாகத்தினரால் மூடப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் அந்தத் தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியவர்களுக்கு நேற்று அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன எனவும் அவர் குறிப்பிட்டார்.

உப்புவெளி பிரதேசத்தில் அமைந்துள்ள பாரிய தனியார் நிறுவனங்களில் சரியான முறையிலான பாதுகாப்பு நடைமுறைகள் செயற்படுத்தப்படாததன் காரணமாக கொரோனாத் தொற்றாளர்கள் சடுதியாக அதிகரித்திருப்பதாகவும், குறிப்பாக சித்திரை வருடப்பிறப்பு காலப்பகுதியில் திருகோணமலை மாவட்டத்துக்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தந்தமையினாலும் அதிகமாக திருகோணமலை மாவட்டத்தவர்கள் வெளி மாவட்டங்களுக்குச் சென்று வந்தமையாலும் மேலும் சுகாதார வழிமுறைகளைக் கையாளாததன் காரணமாக பதிவாகிய தொற்றாளர்களது விகிதத்தில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



கடந்த வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் முன்னெடுக்கப்பட்ட கொரோனா செயலணியின் விசேட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் சரியான முறையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்க இருப்பதாக அவர் குறிப்பிட்டதுடன் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பொருத்தமான சுகாதார வழிமுறைகளை தொடர்ச்சியாக பின்பற்ற வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காலைக்கதிர் Kalaikkathir

**'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உதரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்கு தீனியாகிறது.**



# பாட்டும் நானே? பாவமும் நானே!

**1. கேள்வி:-** எல்லோருமாய் அழைத்தால் அடுத்த முறையும் முதலமைச்சர் பதவிக்குப் போட்டியிடத் தயார் என்று முன்னாள் முதலமைச்சர் கூறியிருக்கிறாராமே?



**பதில் :-** ம...று...ப...டி... யு...மா..மா..மா..மா..மா...? (வடிவேலுக்கு நன்றி)

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியார் நல்லாப் படம் பார்க்கிறார் போல.**

**2. கேள்வி:-** தன்னை ஜனாதிபதிதொலைபேசியில் மிரட்டினார் என அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினரே முறைப்பாடு வைத்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?



**பதில் :-** கோட்டாபய அவர்கள், தான் பாதுகாப்புச் செயலாளர் பதவியைக் கடந்து, மாண்புமிகு ஜனாதிபதி பதவிக்கு வந்துவிட்டமையை அடிக்கடி மறந்து போகிறார் போல் தெரிகிறது. அது அவருக்கும் நல்லதல்ல, நாட்டிற்கும் நல்லதல்ல.



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'கங்கையில் மூழ்கி, மூழ்கிக் குளித்தாலும் காகம் அன்னமாகாது' சாமியோவ்வ்வ்**

**3. கேள்வி:-** வழமையான இலங்கையின் பல சட்டங்களிலிருந்து துறைமுக நகரத்திற்கு விதிவிலக்களித்து 99 வருடக் குத்தகைக்குக் கொடுக்கப் போகிறார்களாமே?

**பதில் :-** நாமும் வடக்கையும் கிழக்கையும் 99 வருடக் குத்தகைக்கு எடுத்தால் இனப்பிரச்சினை தானாகத் தீர்ந்துவிடுமோ?

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ அது நடந்தால் மேயர் மணிவண்ணன் பயப்படாமல் எந்தக் கலரிலும் யூனிபோம் கொடுக்கலாம்.**

**4. கேள்வி:-** மிருகவேள்வியை இந்துமதம் ஏற்றுக் கொள்கிறதா?

**பதில் :-** நீங்கள் எதிர்பார்க்கும் பதிலைச் சொல்லமுடியாமைக்காக வருந்துகிறேன். நான் சொல்லப் போகும் விடை உங்களுக்குப் பெரும்பாலும் பிடிக்காது. ஆனால் உண்மையைச் சொல்லவேண்டியது என்கடமையாகிறது. ஏற்றுக்கொள்கிறது! என்பதுதான் உங்கள் கேள்விக்கான சரியான பதில்.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ யாரங்கே? வாரிதியாரை இந்துமதத்திலிருந்து உடன் வெளியேற்றுங்கள். ஹி.. ஹி..**

**5. கேள்வி:-** கவுன்சிலிங் பற்றி முடிந்தால் ஏதாவது சொல்லுங்களேன் பார்க்கலாம்?

**பதில் :-** தாராளமாகச் சொன்னால் போச்சு! நான் சொல்லப் போகின்றவை நமது தத்துவ அடிப்படையிலான உண்மைகள்.

மனம், புத்தி எனும் இரண்டு கருவிகள் சார்ந்தே மனித இயக்கம் நடக்கிறது. மனம் சார்ந்த செயற்பாட்டை 'உணர்வு' என்றும், புத்தி சார்ந்த செயற்பாட்டை 'அறிவு' என்றும் சொல்கிறோம். இந்த மனமும், புத்தியும் ஒன்றோடொன்று தொடர்புபட்டு இயங்க வேண்டியவை. புத்தித் தொடர்பற்று மனம் இயங்கத் தொடங்கினால், அவன் பைத்தியக்காரன் ஆவான். மனத் தொடர்பற்று புத்தி மட்டும் இயங்கினால் அவன் வக்கிர மனிதனாவான். மனதைப் புத்தியும், புத்தியை மனமும் கட்டுப்படுத்தி இயங்குதலே சமநிலை இயக்கமாம்.

பேரதிர்ச்சி, பெருந்துன்பம், பெரும்ஏமாற்றம் போன்ற சில அதிர்வுதரும் செயற்பாடுகளால் மனதினதும் புத்தியினதும் தொடர்பு சிலவேளைகளில் அறுந்து போகிறது. அறிவின் தொடர்பு அறுந்து போவதால் மனம் வரையறையின்றி இயங்கத் தொடங்குகிறது. அந்நிலையையே இன்று 'டிப்பிறன்' என்கிறார்கள். இந்தப் பாதிப்பு வந்தால் அறிஞன் முட்டாளாகவும், வீரன் கோழையாகவும் போய் விடுவான். இந்நிலையுற்றவர்களின் புத்தியை மீண்டும் வலிமையுறச்செய்தால், அது அவர்களின் மனதைப் பழையபடி அறிவின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும். பாதிப்புற்றவருடன், வலிமையான புத்திசாலி ஒருவர் பேசிப்பேசி தன் புத்திப்பலத்தை நோயாளியின் புத்திக்குப் பகிர்ந்தளித்து, அவரது புத்தியைப் பலப்படுத்துவதே அந்நோயாளியை மீட்டெடுக்கும் வழியாகும்.

அங்ஙனம் நிகழ்ந்தால் நோயாளி மன அழுத்தத்திலிருந்து மீண்டு வருவார். பலம் பெற்ற புத்திசாலி ஒருவர் இங்ஙனம் நோயாளியின் புத்தியைப் பலப்படுத்தும் முயற்சியையே 'கவுன்சிலிங்' என்று இன்றைக்குச் சொல்கிறார்கள்.

இந்தக் 'கவுன்சிலிங்' மேற்கு நாட்டு வழிப்படுத்தலில்த்தான் நமக்குத் தெரியவந்தது என்று பலரும் நினைக்கிறார்கள். அக்கருத்துத் தவறானது. எனக்குத் தெரிந்து உலகில் முதன் முதலாக வந்த 'கவுன்சிலிங்' நூலாகப் பகவத்கீதையைத்தான் கொள்ளவேண்டும் என்று நினைக்கிறேன்.

மிகப்பெரிய வலிமையாளனான அர்ச்சுனன் போர்க்களத்தில் தன் நெருங்கிய உறவினர்களையெல்லாம் கொல்லவேண்டிவரும் என்ற அதிர்ச்சியில்



'டிப்றன்' என்ற மனஅழுத்தத்திற்கு ஆளாகிறான். அதனால் வீரனான அவனால் தனது வில்லைத் தூக்கவோ தேர்த்தட்டில் எழும்பி நிற்கவோகூட முடியாமல் போகிறது. அந்நிலையில் புத்தி வலிமை மிக்க கண்ணபிரான் பகவத்கீதை எனும் உபதேசத்தால் அவனை மீண்டும் பலசாலியாக்கிப் போர் புரிய வைக்கிறார். எனக்குத் தெரிந்து இதுதான் முதன் முதலில் நடந்த 'கவுன்சிலிங்.'

ஒன்றைக் கட்டாயமாகச் சொல்லி முடிக்க வேண்டும். இன்றைக்குச் சில மதங்கள், மதமாற்ற முயற்சியாகக் 'கவுன்சிலிங்கைப்' பயன்படுத்த முயல்கின்றன. அதற்காகச் சிலபேருக்கு 'கவுன்சிலிங்' பயிற்சி வகுப்புகளும் நடத்துகின்றன. அது முட்டாள்த்தனமான முடிவாகும். இயற் கையான அறிவுப்பலமற்றவர்கள் 'கவுன்சிலிங்' செய்ய முற்பட்டால் அவர்கள் தம் அறிவுப்பலத்தை இழந்து மனநோயாளிகளாக மாறும் வாய்ப்பு இருக்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ 'இந்த விடை போதுமா இன்னும் கொங்சம் வேணுமா?'**

**6. கேள்வி:-** வேலன் சாமியாரை முதலமைச்சர் பதவிக்கு நிறுத்தலாம் என முன்னாள் முதலமைச்சர் கூறியது பற்றி?

**பதில்:-** இந்த மனிதர், நம் இனத்தை அழிக்காமல் விடமாட்டேன் என யாருக்கோ சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கிறார் போல. என்ன தகுதியை வைத்து சாமியாரை முதலமைச்சர் பதவிக்குச் சிபார்சு செய்கிறாரோ தெரியவில்லை. நடைபயணத்தில் முன்னால் நடப்பது மட்டுமே முதலமைச்சர் பதவிக்கான தகுதியாகுமா? இப்படி நினைத்துத்தானே இவரிடமும் ஏமாந்தோம். விரும்பினால் தன் கட்சியின் சார்பாக சாமியாரைத் தாராளமாக அவர் நிறுத்தலாமே. 'நான் கட்சி அரசியலுக்குள் வரமாட்டேன்' என்று சாமியார் சொல்லிவிட்டமை பெரிய நிம்மதி.



**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** அந்த மனுஷனும் திருந்தப் போறதில்லை, இந்த மனுஷனும் விடப்போவதில்லை.

**7. கேள்வி:-** கொரோனா இந்தப் பூமியை விட்டு முற்றாகப் போய்த்துலையவே மாட்டாதா?

**பதில் :-** இது இயற்கைக்கும் மனிதனுக்கும் நடக்கிறபோர். இவ்வுண்மை உணர்ந்து சுயநலத்தைக் கைவிட்டு மனிதன் அடங்கினால் இயற்கை அடங்கும். அது நடந்தாலே ஒழிய கொரோனா நம்மை விட்டுப் போகப் போவதுமில்லை. துலையப்போவதும் இல்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** சத்தியவார்த்தை!

**8. கேள்வி:-** அமெரிக்காவில் கறுப்பினத்தவரான 'ஜோர்ஜ் பிகுளொயிட்டை' வன்முறையாய்க் கொன்ற காவல்துறையைச் சார்ந்த வெள்ளை இனத்தைச் சேர்ந்த 'டெரிக் சாவின்' என்ற பொலிஸ்காரரின் செயல் குற்றம் என்று மரணத்தை விசாரித்த நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றமையையும் அதனை வெள்ளை இன அமெரிக்க ஜனாதிபதி வரவேற்றிருக்கின்றமையையும் பார்த்தீர்களா?

**பதில் :-** அதனால்தான் அமெரிக்கா ஜனநாயகத்தின் காவலனாய்க் கருதப்படுகிறது. முன்னர் நடந்து முடிந்த எத்தனையோ இனக்கலவரங்களில் கொல்லப்பட்ட தமிழர்களின், ஆதாரங்களுடன் கூடிய கொலைகளை, நம் நாட்டின் எந்த நீதிமன்றமுமோ எந்த ஜனாதிபதியோ கண்டிக்கவேயில்லை. அதனால்தான் உலக அரங்கில் இன்று நம் நாடு தலைகவிழ்ந்து நிற்கிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** 'நீதிக்குத் தலைவணங்கு'

**9. கேள்வி:-** சிங்களக் கல்வியாளர்களும் துறைமுகநகரப் பிரச்சினையைக் கண்டித்து அறிக்கை விட்டிருக்கிறார்களே. நீதிமன்றமும் கைவிட்டால் நாடு என்னாகப் போகிறது?

**பதில் :-** வேறு என்னாகப் போகிறது? மண்ணாகப் போகிறது. அவ்வளவுந்தான்!

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎** முன்னை இட்ட தீ மூழ்க மூழ்கவே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை மீண்டும் மூடும் நோக்கம் இல்லை

## கல்வி அமைச்சின் செயலர் அறிவிப்பு



நாட்டில் கொவிட் - 19 வைரஸ்தொற்றுப்பரவல் மீண்டும் அதிகரித்துள்ள போதிலும், பாடசாலைகளை மூடுவதற்கு எதிர்பார்க்கவில்லை.

கொவிட் சவாலுக்கு மத்தியில் சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி கல்வி நடவடிக்கைகளை தடையின்றி முன்னெடுக்கவே எதிர்பார்த்துள்ளதாகக் கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

கொவிட் அச்சுறுத்தல் மீண்டும் ஏற்பட்டுள்ள நிலையில் பாடசாலைகளை மூடுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதா என்று கேட்ட போதே பேராசிரியர் கபில பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாடளாவியரீதியிலுள்ளசகலபாடசாலைகளையும் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்ட போது கூட பிரபல பாடசாலைகள் சிலவற்றில் ஒரு சில மாணவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டது.

எனினும் இவர்கள் பாடசாலைச் சூழலில் தொற்றுக்கு உள்ளாகவில்லை. அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பெற்றோருக்கு ஏற்பட்ட தொற்றின் காரணமாகவே பாதிக்கப்பட்டிருந்தனர்.

இதே போன்று சில ஆசிரியர்களுக்கும் தொற்றுறுதி செய்யப்பட்டது. இதன் போது ஏனைய மாணவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கும் உட்படுத்தப்பட்டனர்.

இவ்வாறான துரிதமான செயற்பாடுகள் ஊடாக அனைத்து மாணவர்களதும் கற்றல் செயற்பாடுகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் தடுக்கப்பட்டது. எனவே தற்போதுள்ள சூழலிலும் இதே போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்கவே எதிர்பார்க்கின்றோம்.

பெற்றோர்கள், மாணவர்கள் வீண் அச்சமடையத் தேவையில்லை. பாடசாலைகளில் அவசர மருத்துவ தேவைக்கான அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

எனவே மீண்டும் பாடசாலைகளை மூடி மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை இடை நிறுத்துவதை விட சவாலுக்கு மத்தியில் அதனை முன்னெடுத்துச் செல்வதே பொருத்தமானதாக இருக்கும். – என்றார்.

# துறைமுகநகரின் உரிமையாளர்கள் இலங்கையர்களாக இருக்கவேண்டும்

## ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தல்



துறைமுக நகர அபிவிருத்தியை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கவில்லை. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தையே எதிர்க்கின்றோம். 2019 , 2020 இல் தயாரிக்கப்பட்ட சட்ட மூலங்களில் கொழும்புத்துறைமுக நகரில் அரசாங்கத்துக்கும் உரிமை காணப்பட்டது.

எனினும் தற்போதைய சட்ட மூலத்தில் அது நீக்கப்பட்டுள்ளது. துறைமுக நகரின் உரிமையாளர்கள் இலங்கை மக்களாகவே இருக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறு கையில் –

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் வெளிநாட்டவர்களாகக் கூடும் என்று ஜனாதிபதியின் சட்டத்தரணி ஏற்றுக் கொண்டுள்ளார்.

இலங்கையில் தற்போது காணப்படுகின்ற ஆணைக்குழுக்களிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாகும். துறைமுக நகரம் தொடர்பான சகல அதிகாரங்களும்இந்தஆணைக்குழுவிற்கேஉரித்தானவையாகும். ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பத்திற்கமையவே இந்த ஆணைக்குழு நியமிக்கப்படும்.

2019 இல் இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட சட்ட மூலத்தில் அரச பதவி வகிக்கின்ற அதிகாரிகளே இதன் உறுப்பினர்களாக நியமிக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாடு காணப்பட்டது.

மத்திய வங்கி ஆளுநர், நிதி அமைச்சின் செயலாளர், துறைமுக நகர் உள்ளடங்கும் அமைச்சின் செயலாளர், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், முதலீட்டுசபை தலைவர் மற்றும் அரசமைப்பு சபை அனுமதி வழங்கும் மூவர் அந்த உறுப்பினர்களாகக் காணப்பட்ட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அதனையடுத்து 2020 ஜூன் மாதத்தில் தயாரிக்கப்பட்ட சட்ட மூலத்தில் மேற்கூறப்பட்ட அரச பதவி வகிக்கும் 5 அதிகாரிகளுக்கு மேலதிகமாக மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை தலைவர் உள்ளிட்ட இருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் மூலம் அரசாங்கத்துக்குக் காணப்படும் அதிகாரம் மேலும் வலுப்படும்.

இந்த ஆணைக்குழுவிற்கென நிதி காணப்பட வேண்டும். இதனை ஆரம்பிப்பதற்கான 40கோடி ரூபா நிதியை வெளிநாட்டு நிறுவனமொன்றே வழங்கும் என்று தற்போதைய சட்ட மூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2019 சட்ட மூலத்தில் நாடாளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு அரசாங்கத்தின் ஊடாக இந்த நிதி வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை 2020 சட்ட மூலத்தில் நாடாளுமன்றத்தில் அனுமதி வழங்கப்பட்டு அரசாங்கத்தின் ஊடாகவும், அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாகவும் இந்த நிதி வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய சட்டமூலத்தில் அரசாங்கம் நீக்கப்பட்டு அபிவிருத்தி நிறுவனம் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.


அவ்வாறெனில் இதன் உரிமையாளர் யார் என்ற பிரச்சினை எழுகிறது. இதன் சட்டமூலம் முதலீட்டு சபை சட்டத்திற்குட்பட்டதாகக் காணப்பட வேண்டும். இந்த நிபந்தனைகள் தொடர்பில் அவதானம் செலுத்துமாறு ஜனாதிபதி உள்ளிட்டவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

துறைமுக நகர அபிவிருத்தியை நாம் எதிர்க்கவில்லை. அதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்தையே நாம் எதிர்க்கின்றோம். முன்னைய சட்ட மூலங்களில் இதில் அரசாங்கத்திற்கும் உரிமை காணப்பட்டது. எனினும் தற்போது அது நீக்கப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் உரிமையாளர்கள் இலங்கை மக்களாகவே இருக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும். – என்றார்.

# அடிப்படைவாதம் தலைதூக்க இடமளிக்கப்பட மாட்டாது

## கமால் எச்சரிக்கை தெரிவிப்பு



நாட்டில் அடிப்படைவாதம் தலைதூக்குவதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படாதென பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ண தெரிவித்துள்ளார். .

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர்களிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது மேலும் தெரிவிக்கையில் –

புலனாய்வுப் பிரிவினரும் நாட்டின் ஏனைய பாதுகாப்புத் தரப்பினரும் மிகவும் அவதானத்துடன் இருக்கின்றனர். எனவே அடிப்படைவாதிகள் தலைதூக்குவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடமளிக்கப்படமாட்டாது.

அடிப்படைவாதத்தை போதிக்கும் புத்தகங்கள் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவை அடையாளம் காணப்பட்டு சுங்கத் திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. பாடசாலை புத்தகங்களிலும் பிழையான விடயங்கள் சில கற்பிக்கப்படுகின்றன. அவையும் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சிலை வழிபாடுகளில் ஈடுபடுவோரை கொலை செய்தல், வேற்று மதங்களை வழிபாடு செய்வோரை துன்புறுத்தல் போன்ற விடயங்கள் பாடசாலை புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளன.

எனவே பிழையான விடயங்கள் உள்ளடக்கப்பட்ட புத்தகங்கள் அடையாளம் காணப்பட்டு அவ்வாறான விடயங்கள் நீக்கப்படுமென குறிப்பிட்டுள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## தூதுவளை



தூதுவளை கொடி இனத்தைச் சேர்ந்தது. தனி பந்தலிலும் படரும். மரத்தின் மேலும், வேலியின் மீதும் படரும். இதன் இலை கோவை இலையைப் போல, ஆனால் கனமில்லாமலிருக்கும். இலையின் மேல் பல முட்கள் முளைத்திருக்கும். இதன் பூ கத்தரிப் பூவைப் போல ஊதா நிறத்துடன் கூடியதாக இருக்கும். காய் குண்டு குண்டாக சுண்டைக்காய் போலிருக்கும்.

இது கத்ஙரி குடும்பத்தைச் சேர்ந்தது. எனவே கத்திரி, சுண்டைக்காய், தக்காளி போன்றவற்றிற்கான பொதுவான குணங்கள் இதிலும் காணப்படும். சமீப காலம் வரை தட்டுப்பாடாக கிடைப்பதற்கு அரிதாக இருந்த தூதுவளை இப்பொழுதெல்லாம் எளிதாக நகரங்களிலுள்ள காய்கறி அங்காடிகளில் சுத்தம் செய்யப்பட்டு பாக்கெட்டுக்களில் கிடைக்கின்றது.

தூதுவளை பொதுவாக லேகிய வடிவில் தமிழ் மருந்துக் கடைகளில் கிடைக்கக் கூடியது. ஆனால் அது உண்மையான தூதுவளையால் செய்யப்பட்டது தானா என்ற சந்தேகம் எழுபவர்கள் அதனைத் தவிர்த்து தங்கள் வீடுகளிலேயே வாரம் ஒரு முறை சமையலில் சேர்த்து வர சிறந்த நற்பலன்களைத் தரும். தூதுவளை அனேகமாக அனைத்து இருமல், சளி மருந்துகளிலும் சேர்க்கப்படும் ஒரு மூலிகையாகும்.


தூதுவளையின் முக்கிய குணம் உடல் உஷ்ணத்தை அதிகரிக்கக் கூடியது. தூதுவளையை உட்கொண்டால் உடல் உஷ்ணம் அதிகரிக்கும் அதனால் உடலின் உள் உள்ள சளி வெளியேறும் இருமல் நீங்கும். கப நாடி, கப தோஷம் உடையவர்கள் தூதுவளையை அடிக்கடி சேர்த்துக் கொள்ளலாம். இறப்பு இரைப்பு, ஆஸ்துமா, ஒவ்வாமை, அலர்ஜி, சளி, இருமல், தும்மல், மூக்கடைப்பு, மூக்கில் நீர் ஒழுகுதல், சைனஸ், ஒற்றைத் தலைவலி போன்ற பிரச்சினை உடையவர்களுக்கு தூதுவளை ஓர் அற்புதமான மூலிகையாகும்

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா மகா சமாதி அடைந்த பத்தாவது ஆண்டு தினம் (ஆராதனா மகோற்சவம்) இன்றாகும். அவரின் பக்தரான அமரர் செ.நடேசபிள்ளை இருபத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய சாயி அற்புதம் பற்றிய கட்டுரை பிரசுரமாகின்றது. 'சாயிபாபா சாயி நாதா' என்ற தலைப்பில் அமரர் செ.நடேசபிள்ளையின் ஆக்கங்கள் அடங்கிய சாயி மகாத்மியக் கட்டுரைகள் சிவகாமி அம்மாள் பப்ளிகேஷன்ஸ் பிரசுரமாக 2000 ஆம் ஆண்டு சாயி ஜனன தினத்தன்று வெளியானது. அதில் இடம்பெற்ற ஒரு கட்டுரை இது.**



# மகப்பேறு அருளிய மகான்

நவம்பர் மாதம் 23 ஆம் நாள் புனித நாள். அன்று தான் நம் பகவான் சத்திய சாயி பாபா அவதரித்த நாள். 23.11.1926 .

இதே நவம்பர் மாதம் 23 ஆம் திகதி நன்னாளில் (பிறிதொரு வருடத்தில் ) பெங்களூருக்கு அருகிலுள்ள ஜல காலி என்னும் இடத்தில் ஒரு பாலன் பிறந்தான். அவனின் பிறப்பை பற்றியதுதான் இந்தச் சிறுகதை. அவன் நாமம் கிருஷ்ண கிஷோர். குட்டிக் கிருஷ்ணன்.

சக்கரவர்த்தி அவர்கள் வங்காள தேசத்திலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது குடும்பத்தினரும், அவர்களின் மூதாதையினரும் பழமை வாய்ந்த ஓர் ஆத்மீக இயக்கத்தின் கொள்கைகளைப் பழுதறக் கடைப் பிடித்து, அதன்படி ஒழுகினர். காலம் காலமாக இந்த இயக்கத்தின் தலைமைப் பதவியை சக்கரவர்த்தி குடும்பத்தினரே வகித்து வந்தனர்.

சக்கரவர்த்திக்கு 17 வயது நடக்கும் பொழுது தந்தையைப் பறி கொடுத்தார். அவர் இறக்கும் பொழுது தந்தையே ஸ்தாபனத்தின் தலைவராக இருந்தார். தந்தை வகித்த பதவியைத் தனயனை ஏற்கும்படி வேண்டப்பட்டது. வயது, கல்வித் தகுதி, மதிப்பு மற்றும் போதிய அனுபவமின்மையால் பொறுப்பு மிகுந்த பாரிய பதவியைச் சக்கரவர்த்தி ஏற்க மறுத்து விட்டார்.

சக்கரவர்த்தி கொல்கத்தா சென்று அங்கு புகழ் பெற்ற ஒரு பத்திரிகையின் காரியாலயத்தில் வேலைக்கு அமர்ந்தார். ஓய்வு நேரத்தில் படித்து முதுகலைமாணிப் பரீட்சைக்குத் தேர்வு எழுதினார். பட்டமும் பெற்றார். அப்பொழுது இரண்டாம் மகாயுத்தம் மூண்டது. இவருக்கு இந்திய விமானப்படையில் சேரும் வாய்ப்பு கிட்டிற்று. சேர்ந்து ஒரு சில மாதங்களில் விமானப் படையினர் நடத்திய விசேஷத் தேர்வில் திறம்பட எழுதி விமான ஓட்டியாகத் தெரிவு செய்யப்பட்டார். இவரின் ஆற்றலின் திறமையாலும், அந்தஸ்திலுள்ள உயர்ந்த அதிகாரிகளின் நல்லெண்ணத்தைப் பெற்றதாலும் வெகு விரைவில் ஓர் ஆகாயப் படை அணிக்குத் தலைவராக (Squadron Leader) உயர்வு பெற்றார். இயற்கையாகவே எதற்கும் பயப்படாத உள்ளம் படைத்த சககரவர்ததி எந்தக் கடினமான அபாயகரமான வேலைகளிலும் பங்கு கொள்ளப் பின் நிற்க மாட்டர். விமானம் பறக்கும் பொழுது அநேக ஆயிரமடி உயரத்திலிருந்து பரசூட் (Parachute) மூலம் கீழே பாய்வதிலும் திறமை பெற்று முதல்வராக தேர்ந்து எடுக்கப்பட்டார். பயிற்சியை முன்னிட்டு பல முறை இங்கிலாந்து சென்று வந்தார். திறமை அடிப்படையில் இந்திய விமானப்படைப் பயிற்சி ஸ்தாபனத்திற்குத் தலைவராக உயர்த்தப்பட்டார். சுருங்கச் சொல்லின் இந்திய விமானப் படை வட்டாரத்தில் இவர் பெரும் கீர்த்தி வாய்ந்த அதிகாரியாக கணிக்கப்பட்டார்.

அதிர்ஷ்டமும் துரதிர்ஷ்டமும் எங்கள் உடன் பிறப்புக்கள் அல்லவா? சக்கரவர்த்தியின் குடும்பத்தினரையும் துரதிர்ஷ்டம் தீண்டத் தவறவில்லை.

இவரின் வேகமான முன்னேற்றத்தால் சக ஊழியர்களின் பொறாமையைச் சம்பாதித்தார். போதாத காலம், அதிகாரப் பெருமையினால் சற்று தலைக்கணமும் இவருக்கு ஏற்பட்டது. முடிவு இவர் ஜம்மு காஷ்மீரிலுள்ள ஒரு சிறிய தளத்திற்குத் தலைவராக மாற்றப்பட்டார். இந்த மாறுதல் இவரின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்திற்று.

ஜம்மு காஷ்மீரில் இவருக்கு ஒதுக்கப்பட்ட வாசஸ்தலம் இவரின் உயர்ந்த அந்தஸ்திற்கு உகந்ததாக அமையவில்லை. மிகவும் குளிர்ந்த தேசம். மழையும் புயலும் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். வீட்டின் கூரை பழுதடைந்திருந்ததால் அறைகள் சதா ஒழுகிக் கொண்டே இருந்தன. அறைகளை சூடேற்றும் சாதனங்களும் சீராக இயங்கவில்லை. இவற்றுடன் மனைவியும் கர்ப்பம் தரித்தாள். தலைப் பிரசவம். மனைவி கவலையற்றிருக்க வேண்டிய நேரம். அன்றாடம் வீட்டில் அனுபவிக்கும் பல வசதியீனங்களினால் பாதிக்கப்பட்டு மனைவி மனோ தைரியத்தையும் இழந்தாள். அவளின் உடல் நலம் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்பட்டு குழந்தையும் இறந்து பிறந்தது. அத்துடன் மனைவியின் கர்ப்பபையும் பாதிப்படைந்தது. சொற்ப காலத்தில் அது ஒரு தொற்று நோயாக வெளிப்பட்டது. கணவனையும் இந்த நோய் விட்டு வைக்கவில்லை.

நோயைத் தீர்க்க பிரசித்தி பெற்ற பல வைத்திய கலாநிதிகளின் ஆலோசனைகளை நாடினர். அவர்கள் அனைவரும் இந்த வியாதி மாற்ற முடியாதது, அத்துடன் இருவரும் குழந்தை பெறும் பாக்கியத்தையும் முற்றாக இழந்து விட்டீர்கள் என்று ஏகமனதாகத் தீர்ப்பு வழங்கினர்.

பிள்ளைப் பாக்கியமற்று, ஆரோக்கியம் சிதைபட்டு, தொழிலில் முன்னேற்றம் தடைப்பட்டு, வசிக்கும் இல்லத்திலும் வாழ முடியாத பரிதாபமான நிலைக்குத் தள்ளப்பட்டனர். வேறு ஒருவராயின் இந்தக் கஷ்டங்களிலிருந்து விடுபட தவறான வழிகளை பின்பற்றி தங்கள் வாழ்க்கையை நரகமாக்கியிருப்பர். ஆனால் இவர்களோ, இவர்கள் பெற்றோர் செய்த புண்ணிய பலன்களினாலோ என்னவோ இந்தக் கவலைகளிலிருந்து விடுபட ஆத்மீகப் பாதையைப் பின்பற்றினர்.

ஸ்ரீ சீரடிபாபாவின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூல்கள் இவர்கள் கைக்கு கிடைத்தன. அந்த நூல்களைத் திரும்பத் திரும்பப் படித்தனர்.

அவர்கள் மனமும் சற்று அமைதியடைந்தது. இவர்களின் தூய அன்பினால் கவரப்பட்ட சாயி நாதர். இவர்களுக்குக் அருள் பாலிக்கத் தொடங்கினார்.

எதிர்பாராத விதத்தில் சக்கரவர்த்தி பெங்களூருக்கு அருகாமையிலுள்ள ஸலகா என்ற தளத்திற்கு மாற்றப்பட்டார். அங்கு வசித்த சக வங்காளிகளின் சிநேகிதம் இவருக்கு கிட்டிற்று. அவர்களுள் பேராசிரியர் பனார்ஜியும் ஒருவர்.

இவர்கள் பெங்களூருக்கு அருகாமையில் வசித்த



மையினால் பகவான் சத்திய சாயி பாபாவைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டார்கள். பகவான் சத்திய சாயி பாபா சீரடியின் மறு அவதாரமென்றும் கேள்விப்பட்டார்கள். பகவானைப் போய் நேராக சந்திப்பதற்கு மிகவும் ஆர்வம் அடைந்தனர். தங்கள் நண்பன் பேராசிரியரையும் தங்களுடன் வரும்படி அழைத்தார்கள்.

பேராசிரியர் *"நான் பாபாவைப் பற்றி பல விதமாகக் கேள்விப்பட்டுள்ளேன். ஆகையால் நான் அவரைச் சந்திக்க விரும்பவில்லை"* என்று பகர்ந்தார். சக்கரவர்த்தியோ அவரை விடுவதாக இல்லை. விடாப்பிடியாக நின்று ஓய்வு நாளில் சக்கரவர்த்தியும் பேராசிரியர் பனார்ஜியும் இன்னும் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியும் வைட்பீல்ட் சென்றனர்.

ஆச்சிரம வாசலையடைந்ததும் ஒரு பையன் *"டாக்டர் பனார்ஜி! உங்கள் கூட்டத்தினருக்கு 9ஆம் நம்பர் அறையை பாபா ஒதுக்கி வைத்துள்ளார். திறப்பு இதோ உள்ளது. பெற்றுக் கொள்ளவும்."* என்றான். சக்கரவர்த்திக்கு இது ஒரு பெரும் வியப்பாக இருந்தது. தாங்கள் அன்று வைட்பீல்ட் போவதை பற்றி அவர்கள் எவருக்கும் அறிவிக்கவில்லை. டாக்டர் பனார்ஜியோ ஒன்றும் நடவாதது போல் அமைதியாக இருந்தார்.

தங்கள் பொருள்களை எல்லாம் அவர்களின் அறையில் வைத்து விட்டு பாபாவைச் சந்திக்கச் சென்றார்கள். பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் பாபாவின் தரிசனத்திற்கு காத்திருந்தனர்.

> **பாபா மேல் மாடியில் வந்து நின்றார். சக்கரவர்த்தி பாபாவைப் பார்த்ததும் தான் ஒரு காலத்தில் இவருடன் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகினவராகவும், பிறகு அவரின் தொடர்பு அற்று அவரை இன்றுதான் மீண்டும் சந்திப்பவராகவும் அவருக்குத் தோன்றிற்று.**

பாபா மேல் மாடியில் வந்து நின்றார். சக்கரவர்த்தி பாபாவைப் பார்த்ததும் தான் ஒரு காலத்தில் இவருடன் மிகவும் அன்னியோன்னியமாகப் பழகினவராகவும், பிறகு அவரின் தொடர்பு அற்று அவரை இன்றுதான் மீண்டும் சந்திப்பவராகவும் அவருக்குத் தோன்றிற்று. ஏதோ தான் தொலைத்த விலை மதிப்புள்ள பொருளைத் திரும்பவும் பெற்றவரடையும் குதூகலத்தை அடைந்தார். கண்ணில் நீர் சுரந்தது.

அவர்கள் சென்ற அன்றே அவர்கள் மூவருக்கும் பாபா பேட்டி அளித்தார். டாக்டர் பனார்ஜியைக் கட்டி அணைத்து *"கடைசியாக என்னிடம் வந்து விட்டாய்"* என்று கூறி அவருக்கு ஓர் அழகிய பதக்கத்தை கையை அசைத்து காற்றிலிருந்து உண்டாக்கிக் கொடுத்தார். மூன்று பேருடனும் ஆத்மீகத்தைப் பற்றி 45 நிமிடங்கள் கதைத்தார். அதன் பின் சக்கரவர்த்தியின் கைகளைக் கோர்த்து ஒரு கிண்ணம் போல வடிவம் அமைத்தார். பின் தன் கையை மேலே உயர்த்தி அசைத்ததும் பாபாவின் விரல்கள் ஊடாக விபூதி சக்கரவர்த்தியின் உள்ளங்கையில் நிறைய சொரிந்தது.

அவ்வளவு விபூதியையும் கீழே சிதற விடாமல் விழுங்கும் படி கட்டளை இட்டார். சக்கரவர்த்தியும் பாபாவின் கட்டளைக்குப் பணிந்தார். தான் அனுபவிக்கும் இன்னல்களை எல்லாம் பாபாவிற்குச் சொல்ல வேண்டுமென்று விரும்பினார். ஆனால் அந்த முயற்சி பலிக்கவில்லை . அடுத்த நாள் காலை மூவரையும் இன்னும் ஒரு சந்திப்பிற்கு அழைத்தார். இரண்டாம் முறையும் விபூதி வரவழைத்து சக்கரவர்த்தியை உண்ணும்படி பணித்தார். சக்கரவர்த்தியும் பாபா பணித்தபடி மிகவும் விருப்பமுடன் உண்டார். *"இவை சுவையும் மணமும் நிறைந்தனவாக இருக்கின்றன"* என்று மிகவும் பக்தியுடன் பாபாவிடம் தெரிவித்து மூவரும்பாபாவிடம்விடைபெற்றுவெகுஉற்சாகத்துடன் பெங்களூர் நோக்கிப் புறப்பட்டனர்.

அடுத்தநாள் விடிய சக்கரவர்த்தி விழித்தெழுந்தார். எழுந்ததும் அவரை பீடித்திருந்த தொற்று நோய் அவரை விட்டு அகன்றதை உணர்ந்தார். மனைவியிடம் சொல்வதற்கு வாயெடுத்ததும், அவளும் தான் தொற்று நோயிலிருந்து பூரணமாக விடுபட்ட சந்தோஷமான செய்தியை வெகு ஆனந்தத்துடன் கணவனிடம் கூறினாள். இருவரும் பரவச நிலை எய்தினார். அவர்கள் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் அருவி போலப் பாயத் தொடங்கிற்று. இருவரும் பூரணமாக பாபாவிடம் சரணடைந்து அவரின் திருநாமத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தனர் .

அடுத்த மாதம் சக்கரவர்த்தியும் டாக்டர் பனார்ஜியும் தங்கள் குடும்பத்துடன் பாபாவைத் தரிசிக்க புட்டபர்த்திக்குச் சென்றனர். இவர்களுக்கு பேட்டி அளிக்கும் போது பாபா சக்கரவர்த்தியின் மனைவியை நோக்கி *"இந்த வருடம் உனக்கு ஒரு ஆண் மகன் பிறப்பான்"* என்றார். இதை பாபா சொன்னதும் சக்கரவர்த்தி சிரித்தார். சிரிப்பதற்கு காரணத்தைக் கேட்டார் பகவான் பாபா. சக்கரவர்த்தி பாபாவை பக்தியுடன் வணங்கி *"பாபா பிரசித்தி பெற்ற 4 வைத்திய கலாநிதிகள் என்னையும் என் மனைவியையும் வெகு நுணுக்கமாக நீண்ட சோதனைக்கு உட்படுத்தி எங்களுக்கு இனிமேல் பிள்ளைப் பாக்கியம் உண்டாவதற்கான தகுதியை இருவரும் பூரணமாக இழந்து விட்டோம் என அறிவித்தார்கள்.*

**(11 ஆம் பக்கம் பார்க்க...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்ரஸா பாடசாலை, இஸ்லாமிய அடிப்படைவாதம் குறித்து அரசு இரண்டு வாரத்திற்குள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை


மத்ரஸா பாடசாலை, இஸ்லாமிய அடிப்படைவாதம்தொடர்பில் அரசாங்கம் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் இரண்டு வார காலத்திற்குள் முழுமையாகச் செயற்படுத்த வேண்டும். இல்லாவிடின் மாற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் பொதுக் கொள்கைக்கு அமைய செயற்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார். கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இரண்டு வருட காலங்கள் நிறைவுபெற்றுள்ள நிலையில் உண்மையான சூத்திரதாரியைக் கண்டறிவதற்கும், இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்கும் முறையான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதற்கு கடந்த அரசாங்கமும், இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை செயற்படுத்தாமைக்கு தற்போதைய அரசாங்கமும் பொறுப்புக் கூற வேண்டும்.



பயங்கரவாதி சஹ்ரான் தற்கொலை குண்டுதாரியாகி தன்னை மாய்த்துக் கொண்டதுடன் இஸ்லாமிய அடிப்படைவாதம் அழிவடையவில்லை. அடிப்படைவாதிகளால் சாதாரண முஸ்லிம் சமூகத்திலிருந்து பலர் அறிந்தும், அறியாமலும் மூளைச்சலவை செய்யப்பட்டு அடிப்படைவாதக் கொள்கைக்கு ஈர்க்கப்பட்டுள்ளார்கள் அடிப்படைவாதக் கொள்கையை உடையவர்களால் எப்போதாவது பாரதூரமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

சாதாரண முஸ்லிம் இளைஞர், யுவதிகளை மூளைச்சலவை செய்து அவர்களை அடிப்படைவாதிகளாக்கும் நடவடிக்கைகளை ஒரு சில அரச சார்பற்ற அமைப்புக்களும், பல்கலைக்கழகங்களும் முன்னெடுக்கின்றன.

பட்டிக்கலோ பல்கலைக்கழகம் அடிப்படைவாதத் துக்கான மூளைச்சலவை செய்யும் ஒரு பல்கலைக்கழகமாகவே காணப்படுகிறது. கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தேன். இதுவரையில் அந்த வழக்கு விசாரணைக்கு ஏன் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா, பெடிகலோ கம்பஸ் தொடர்பிலும் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சிறந்த யோசனைகளை முன்வைத்துள்ளது. இந்த யோசனைகளைச் செயற்படுத்துவதில் அரசாங்கம் காலம் தாழ்த்துவது சந்தேகத்திற்குரியது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதற்குப் பின்னர் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா ஆளுநர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து தலதா மாளிகை வளாகத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்தேன்.

ஒருவர் பதவி விலக வேண்டும் என்பதற்காக நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சர் , இராஜாங்க அமைச்சர் மற்றும் ஆளுநர் பதவி வகித்த முஸ்லிம் அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றாகப் பதவி விலகி சிங்கள இனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக செயற்பட்டார்கள். இதனை சிங்கள அரசியல்வாதிகள் ஒரு பாடமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை இல்லாதொழிக்க அனைத்து சிங்கள அரசியல்வாதிகளும் முதலில் கட்சி பேதங்களைத் துறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மத்ரஸா பாடசாலை கல்வி திணைக்களம் அறிவுறுத்தியுள்ள பாடத்திட்டத்துக்கு முரண்பட்டதாகக் காணப்படுகிறது. அனைத்து இன மக்களும் கல்வித் திணைக்களம் அறிவுறுத்தும் பாடத்திட்டங்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும். மத்ரஸா பாடசாலை தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழு அறிக்கையின் பரிந்துரைகளைத் துரிதமாக நிறைவேற்றுவது அவசியமாகும்.

மத்ரஸா பாடசாலைகளில் கற்றும் மாணவர்கள் கலை,விளையாட்டு என பலதரப்பட்ட பொதுத் துறைகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். மதக் கருத்துக்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங் கையின் கல்வி மரபிற்கு மத்ரஸா பாடசாலைகள் பொருத்தமற்றது.

காதி நீதிமன்றம் முழுமையாகத் தடை செய்யப்பட வேண்டும் என நாடாளு மன்றில் தனிநபர் பிரேரணையை முன் வைத்தேன் இதுவரையில் எவ்வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தை இயக்கிய இஸ்லாமிய அடிப்படைவாதம் தற்போதைய அரசாங்கத்தையும் இயக்குகிறதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

மத்ரஸா பாடசாலை, இஸ்லாமிய அடிப்படைவாதம், மற்றும் காதி நீதிமன்றம் ஆகியவை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரைகளை அரசாங்கம் இரண்டு வார காலத்திற்குள் முழுமையாகச் செயற்படுத்த வேண்டும் இல்லாவிடின் மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இஸ்லாமிய அடிப்படைவாதத்தை முழுமையாக இல்லாதொழிக்கவும், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்தவும் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். – என்றார்.

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரிகள் அம்பலப்படுத்தப்படல் வேண்டும்

## போராட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்கள்

உயிர்த்த ஞாயிறு தின தொடர் குண்டுவெடிப்பில் அழிவடைந்த மூன்று தேவாலயங்களில் இரண்டு தேவாலயங்கள் இலங்கை அரசாங்கத்தால் புனரமைக்கப்பட்டு, நினைவுகூரல் நிகழ்வுகள் இடம்பெற்ற நிலையில், கிழக்கில் உள்ள மக்கள் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அழிவடைந்த தேவாலயத்தில் பிரார்த்தனைகளை நடத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு சியோன் தேவாலயம் இதுவரை புனரமைக்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. குண்டுவெடிப்பில் அழிக்கப்பட்ட கட்டுவாபிட்டிய புனித செபஸ்டியன் தேவாலயம் மற்றும் கொழும்பு – கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம் ஆகியவை இலங்கை கடற்படையால் விரைவாக புனரமைக்கப்பட்டுள்ளன.

எனினும், மோசமான அழிவினை எதிர்நோக்கிய மட்டக்களப்பு சியோன் தேவாலயம் இரண்டு வருடங்கள் கடந்தும் இதுவரை புனரமைக்கப்படவில்லை என, பொது மக்களும், பக்தர்களும் கவலை வெளியிட்டுள்ளனர். தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்தபின் தேவாலயத்தின் புனரமைப்பு பணிகள் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது என மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தின் அருட்தந்தை ரொசான் மகேஷன் தெரிவிக்கின்றார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பின்னர், புனரமைப்பிற்கு அரசாங்கத்திடம் இருந்து பணம் கிடைக்கவில்லை. அதனாலேயே பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இடிந்து விழுந்த மற்றும் பூரணப்படுத்தப்படாத சுவர்களையும், தரையையும் காண முடிந்தது என, தேவாலயத்திற்கு வருகைத் தந்த ஊடகவியலாளர்கள் தெரிவித்துள்ளனர். கட்டி முடிக்கப்படாத சுவர்களுக்கு மத்தியில், தூசிகள் படர்ந்திருந்த தரையில் அமர்ந்து பெரும்பான்மையான பக்தர்கள் விசேட ஆராதனையில் பங்கேற்றனர்.

ஏப்ரல் 20, செவ்வாய்க்கிழமை, ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவாலயத்தின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்துள்ளனர். தேவாலயத்தின் புனரமைப்பிற்காக திறைசேரியால் ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் நிதியில் ஆறில் ஒரு பங்கிற்கும் குறைவான தொகை கிடைத்துள்ளது என, அருட்தந்தை றொஷான் மகேன் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். இந்த தேவாலயத்தை புனரமைக்க 3.7 கோடியை ஒதுக்கியுள்ளதாக திறைசேரி அறிவித்திருந்ததாகவும், எனினும் இராணுவத்திற்கு சுமார் 60 லட்சம் ரூபாய் மாத்திரமே கிடைத்துள்ளதாக தான் கருதுவதாக, அருட்தந்தை றொரான் மகேஷன் குறிப்பிட்டுள்ளார்.

உயிரிழந்த பக்தர்களின் புகைப்படங்களைக் கொண்ட ஒரு பனர் சியோன் ஆலயத்தின் முன் காட்சிக்கு வைக்கப்பட்டது. அவற்றில் 14 சிறுவர்கள் புகைப்படங்களும் காணப்படுகின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பலியானவர்களை நினைவு கூரும் வகையில் நேற்று காலை கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில் நடைபெற்ற பிரதான ஆராதனைகளின் பின்னர் உரையாற்றிய கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, 'உண்மையை புதைத்து குற்றவாளிகளை திருத்துவதற்கான ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சியில் சேர ஒருபோதும் தயாராக இல்லை.' எனக் குறிப்பிட்டிருந்தார்.

68 சிறுவர்கள் உட்பட 269 பேரின் உயிரைக் கொன்ற குற்றத்தில் அப்போதைய அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமும் அலட்சியமாக இருப்பதை வலியுறுத்திய அவர், மந்தமான செயற்பாடுகள் குறித்து ஆழ்ந்த வருத்தத்தை வெளிப்படுத்தினார். மேலும் கொலைகளுக்குப் பின்னால் அரசியல் நோக்கங்கள் உள்ளன என்பது தெளிவாகிறது எனவும் அவர் கூறினார்.

ஆனால் அந்த உண்மைகள் என்ன என்பதை பேராயர் வெளியிடவில்லை. இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் சூத்திரதாரிகள் நாட்டுக்கு அம்பலப்படுத்தப்பட வேண்டும் எனக் கோரி, கிறிஸ்தவ மதகுருமார்கள், கன்னியாஸ்திரிகள், சிவில் சமூக அமைப்புகளின் உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களின் பங்கேற்புடன் நீர்கொழும்பில் போராட்டம் ஒன்றும் நேற்று நடத்தப்பட்டது.

# மீண்டும் சு.கவில் இணைய சந்திரிகாவுக்கு அழைப்பு

## கட்சியின் பொதுச்செயலர் விடுத்தார்



முன்னாள் ஜனாதிபதி – சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் தங்கள் கட்சியில் இணைந்தால் அதை ஒரு கௌரவ மாகக் கருதுவோம் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்க முடியும் என்று ஜெயசேகர குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக்கட்சியின் அனைத்து இலங்கைக் குழு கூட்டத்தையும் ரத்து செய்யுமாறு தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, கட்சியின் பொதுச் செயலாளர் என்ற வகையில் தயாசிறிக்கு அனுப்பிவைத்த கடிதத்திற்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கட்சி முடிவுக்கு எதிராக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரித்தமையால் திருமதி குமாரதுங்க கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளருக்கு திடீர் இடமாற்றம்

சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் பதவியிலிருந்துவைத்தியர்பாலிதகருணபேமாநீக்கப்பட்டுள்ளார். சுகாதார மேம்பாட்டு பணியகம் இது தொடர்பில் தெரிவிக்கையில், வைத்தியர் கருணபேமா இடமாற்றத்தைப் பெற்றுள்ளமையுடன்நிறுவனத்தின்பணிப்பாளர்பதவியிலிருந்து தனது சேவையை முடித்துக் கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளது. வைத்தியர் பாலிதா கருணபேமா 2020 ஆம் ஆண்டில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் தோன்றியதிலிருந்து சுகாதாரத் துறையில் முக்கிய பங்கு வகித்தார்.

ஒரு சிறப்பு மருத்துவர் என்ற முறையில், கொரோனா வைரஸ் குறித்து அவர் தொடர்ந்து விளக்கங்களை அளித்து, ஆலோசனை வழங்கியதன் மூலம் பொதுமக்களுக்கு வழிகாட்டினார் என சுகாதார மேம்பாட்டு பணியகம் மேலும் தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை தமிழ்ப் பிரதேச பிரிவு தரம் இறக்குவது இடைநிறுத்தம்

## அமைச்சர் சமலுடன் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேரடியாகப் பேசியமையை அடுத்துத் தீர்மானம்



**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம்,ஏப்ரல் 23**

**கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரம் இறக்கும் செயல்பாட்டை எதிர்வரும் 4 ஆம் திகதி வரையில் இடை நிறுத்தி வைக்குமாறு உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ பணித்துள்ளார்.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று அவரைச் சந்தித்துப் பேசியமையை அடுத்து இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.**

கல்முனை பிரதேச சபையின் செயல்பாடுகளை மீண்டும் உப செயலகமாக மாற்றுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கடிதம் அனுப்பிய விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இ.சார்ள்ஸ் நிர்மலநாதன், சி.சிறிதரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கோ.கருணாகரம் ஆகியோர் நீர்ப்பாசன அமைச்சரும், அரச பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவைச் சந்தித்து கலந்துரையாடியமையை அடுத்தே உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு இந்த பணிப்புரையை அமைச்சர் விடுத்தார்.

இச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

அம்பாறை மாவட்டத்தில் 29 கிராம சேவகர் பிரிவைக் கொண்ட ஒரு பிரதேச செயலாளர் பிரிவைத் தனியாக இயங்க அனுமதிப்பதுஎன்பது 1990ஆம்ஆண்டே அமைச்சரவையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட போதும் இன்று வரையில் வர்த்தமானியில் அது பிரசுரிக்கப்படாமல் உள்ளது. இதே காலத்தில் வடக்கில் அமைச்சரவை அனுமதித்து, இன்றுவரை வர்த்தமானியில் அறிவிக்கப்படாத போதும் அங்கே தனியான பிரதேச செயலகங்களாக வவுனியா தெற்கு மற்றும் வெலிஓயா பிரதேச செயலகங்கள் இயங்குகின்றன. எனினும் கல்முனை பிரதேச பிரிவு மட்டும் தனியான பிரதேச செயலகமாக இயங்க இன்றுவரை அனுமதிக்கப்படவில்லை. சில அரசியல்வாதிகளே அதற்குத் தடையாகவுள்ளனர்.


90 வீதம் தமிழர்கள் வாழும் கல்முனைக்கு இவ்வாறான நிலைமை. ஆனாலும் இதே மாவட்டத்தில் வெறும் 6 கிராம சேவகர் பிரிவுகளை மட்டும் உள்ளடக்கிய தனியான பிரதேச செயலாளர் பிரிவு உண்டு. இந்த நிலையில் பிரதேச செயலகம் என உள்ள அறிவித்தல் பலகையினையும் இறப்பர் முத்திரையினையும் உப செயலகம் என மாற்றுமாறு தற்போது அமைச்சின் செயலாளர் கடிதம் எழுதியுள்ளார்.

எனவே இதனை இரத்து செய்து கல்முனை பிரதேச செயலாளர் பிரிவைத் தனியான பிரதேச செயலகமாக இயங்க அனுமதிக்க வேண்டும்.- எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதன்போது அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்ட அமைச்சர், உப செயலகமாக மாற்றுமாறு அனுப்பிய கடிதத்தினை நிறுத்தி வைப்பதோடு இந்த விடயத்தை மாவட்ட அரச அதிபருக்கும் தெரியப்படுத்துமாறும் இது தொடர்பில் 4 ஆம் திகதி விசேடமாக ஆராயப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டார். அன்றைய கூட்டத்திற்கு பிரதேச செயலாளரையும் அழைக்குமாறு அமைச்சரால் பணிக்கப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் இ.சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

# இந்தியக் கடத்தல்காரர்கள் ஐவரை படகுடன் கொரோனாவுக்கு அஞ்சி விடுவித்த கடற்படை





**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,ஏப்.23

இந்தியாவில் இருந்து பெருமளவு கடத்தல் பொருள்களுடன் மன்னார் கடற்பகுதிக்குள் நுழைந்த இந்தியப் படகை மடக்கி அதில் இருந்த ஐவரைக் கைது செய்த கடற்படையினர், பின்னர் கொரோனா நெருக்கடி காரணமாக ஐவரையும் சட்ட நடவடிக்கை இன்றி படகுடன் விடுவித்தனர்.

இந்தியாவின் நாட்டுப் படகில் பயணித்த இந்திய மீனவர்கள் ஐவர் பெருமளவு ஏலக்காய் மற்றும் மருத்துவப் பொருள்கள், அழகு சாதனப் பொருள்கள் என பல மில்லியன் ரூபா பொருள்களை இந்தியாவில் இருந்து கடத்தி வந்த சமயம் மன்னார் குதிரைமலைய அண்டிய கடல் பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப் பட்டனர்.

ஐவரும் கற்பிட்டி கடற்படை முகாமிற்கு கொண்டு வரப்பட்டனர். பொருள்கள் அனைத்தும் கையகப்படுத்தப்பட்ட நிலையில், நேற்று மாலை படகு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்ட படகு மூலமே ஐவரும் இந்தியா பயணிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தமிழ்நாடு தங்கச்சிமடத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் பிரேம், ரமேஷ் , யோகன்சா, உணவிஸ்ராக், சந்தியா கிறிஸ்டன் ஆகியோரே கடற்படையினரால் கைது செய்யப்பட்ட பின்பு விடுவிக்கப்பட்டனர்.

# முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி யாழ். பல்கலையில் திறந்து வைப்பு



**(ந.லோகதயாளன், நிதர்ஷன்)**

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் இன்று காலை பல்கலைக் கழக மாணவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி கடந்த ஜனவரி மாதம் 8ஆம் திகதி இரவு, உடைக்கப்பட்டிருந்தது. இதையடுத்து மாணவர்கள், தமிழ் உணர்வாளர்கள், அரசியல் தலைவர்கள் கண்டனம் வெளியிட்டமையோடு பல்கலைக்கழக மாணவர்கள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் குதித்தனர்.

மாணவர்களின் கடும் அழுத்தத்தை அடுத்து மீண்டும் நினைவுத் தூபியை அதே இடத்தில் அமைப்பதற்கு பல்கலை நிர்வாகம் முன்வந்தது.

இதையடுத்து கடந்த ஜனவரி 11 ஆம் திகதி அதிகாலை, யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராசா அவர்கள் தலைமையில் அடிக்கல் நாட்டப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக உபவேந்தரின் அனுமதிக்கு அமைய, அடிக்கல் நாட்டப் பட்டதைத் தொடர்ந்து, மாணவர்களால் நினைவுத் தூபி கட்டுமானம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

புதுப் பொலிவுடன் அமைக்கப்பட்டிருக்கும் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் மாணவர்களால் திட்டமிடப்பட்டவாறு இன்று காலை 7.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நினைவு முற்றத்தில் நிறுவப்பட்டிருக்கும் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து, ஈகைச் சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாணவர்களால் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டிருந்தது.

யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ்.சிறிசற்குணராசா அவர்களால் இது திறந்து வைக்கப்பட ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட நிலை யில், உப வேந்தருக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டதை அடுத்து அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டை முடக்குகின்ற திட்டம் ஏதும் இல்லை என்கிறார் ராணுவத் தளபதி



எதிர்வரும் தினங்களில் ஏதாவது ஒரு பிரதேசத்தில் அதிகளவான கொவிட் தொற்றாளர்கள் பதிவாகும் நிலைமை இருந்தால் குறித்த பிரதேசத்தை கட்டாயமாகத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதியும் கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனினும் எதிர்வரும் நீண்ட வார இறுதி விடுமுறையின் போது நகரங்களுக்கு இடையில் பயணிப்பதை குறைத்துக் கொள்ளுமாறு அவர் கோரியுள்ளார். அதேபோல், நாட்டை முடக்கவோ அல்லது வேறு சட்டங்களை அமுல்படுத்தவோ எந்தவித தீர்மானமும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் தற்போது நடைபெறும் விசேட செய்தியாளர் சந்திப்பில் இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.

# நாட்டை உடனே முடக்குமாறு சுகாதாரத் தரப்பில் கோரிக்கை

இலங்கையில் மீண்டும் அதிகரித்த கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் உடனடியாக முழு நாட்டையும் முடக்குவதன் அவசியத்தை சுகாதாரத் தரப்பினர் வலியுறுத்தியுள்ள நிலையில் வெள்ளி மாலை அது தொடர்பான முக்கிய முடிவுகள் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆகக்குறைந்தது 4 நாள்களுக்கு நாடு முழுவதும் முடக்க நிலையை அமுல்படுத்தி, வேகமாகப் பரவும் கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண கோரியுள்ளார்.

முடக்கநிலை தொடர்பான கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், வெள்ளி ஜனாதிபதியுடன் விசேட கலந்துரையாடலை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பிற்கு கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள அனைத்து பிரிவினரும், தொற்றுநோயியல் விசேட வைத்தியர்களின் குழாமினரும் அழைக்கப்பட்டுள்ளனர். தமது கோரிக்கைக்கு ஜனாதிபதியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கப் பெறும் என உபுல் றோஹண தெரிவித்தார். நாட்டில் தற்போது அதிகரிக்கும் கொரோனா பரவலை கருத்திற்கொண்டு பொதுமக்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும். - என அவர் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சலுகைப்பொதியில் ஊழல் செய்ததாக நிரூபித்தால் அமைச்சுப் பதவியை துறப்பேன் என பந்துல சபதம்

ச.தொ.ச. உட்பட சுப்பர் மார்கட்களில் புத்தாண்டு காலப்பகுதியில் மக்களுக்கு பெற்றுக்கொடுத்த சலுகை பொதிகளில் ஊழல் – மோசடிகள் இடம்பெற்றிருப்பதாக நிரூபிக்கப்பட்டால் அமைச்சுப் பதவியை ஒரு மணித்தியாலத்தில் துறந்து செல்வேன் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை அமைச்சின்விசேடகூற்றைமுன்வைத்துஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் –

உலக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் பரிமாற்றங்கள் வீழ்ச்சியடைந்திருந்த நிலையில் புத்தாண்டு காலப்பகுதியில் பொது மக்களுக்கு சலுகைகளை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் 12 அத்தியாவசிய பொருள்கள் அடங்கிய சலுகை பொதியொன்று ச.தொ.ச. உட்பட சுப்பர் மார்க்கட்களில் பெற்றுக் கொடுத்தோம்.

ஆனால், இந்த பொதியில் தரமற்ற பொருள்கள் இருக்கின்றன என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அவ்வாறு குற்றச்சாட்டுகளை முன்வைத்தவர்களைக் கைதுசெய்துள்ளதாகவும் கூறுகின்றனர்.

மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் சலுகைகளுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராக சமூக நீதிக்கான இயக்கம் கொம்பனிவீதி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாம் முறைப்பாடுகளை செய்துள்ளோம். அத்துடன் ச.தொ.ச நிறுவனத்தின் தலைவர், கூட்டுறவு நிறுவனங்களின் தலைவர், தேயிலை வழங்குநர் சபையும் கொம்பனிவீதி பொலிஸில் இதுதொடர்பில் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளனர்.



சலுகை பொதியில் ஊழல் – மோசடிகள் இடம்பெற்றிருப்பது நிரூபிக்கப்பட்டால் ஒரு மணித்தியாலம்கூட நாடாளுமன்றத்தில் இருக்க மாட்டேன் என்பதுடன் பதவியை இராஜினாமா செய்துவிட்டு செல்வேன்.மனசாட்சிக்கு உட்பட்டு அர்ப்பணிப்புடன் நாம் செயற்படுகின்றோம். ஆகவே, நான் எவரையும் கைதுசெய்யுமாறு கூறவில்லை. – என்றார்.

# மகப்பேறு அருளிய...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

*ஆனால் பாபாவோ எங்களுக்கு குழந்தை கிடைக்குமென்று சொல்கிறீர்கள்"* என்றார்.

பகவான் சக்கரவர்த்தியின் கண்களை உற்று நோக்கி அவரின் கைகளினுள் குறிகாட்டும் இரு விரல்களையும் ஒன்றோடொன்று குறுக்காக வெட்டும் பாவனையில் வைத்து சாமி சங்கற்பம் செய்தால் அது தவறாது நடந்தே தீரும். இந்த வருடம் நவம்பர் மாதம் ஓர் உன்னத ஆத்மா உங்களிடம் வருகிறது. *"நானே நேரே வந்து குழந்தைக்கு நாமகரணம் செய்து வைப்பேன்"* என்று பகர்ந்தார். ஆத்மீகக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த சக்கரவர்த்தி தான் ஒரு தெய்வீக புருஷர் முன் நிற்பதாக உணர்ந்தார். சக்கரவர்த்தியின் மனைவிக்கு இராமரின் உருவம் பொருந்திய ஒரு பதக்கத்தையும் கையை அசைத்து எடுத்துக் கொடுத்தார். சக்கரவர்த்தியின் மனைவி கிருஷ்ண பக்தை. குட்டிக் கிருஷ்ணனில் கொள்ளை ஆசை. தன் கணவனிடம் இந்தக் குறையை அடிக்கடி எடுத்துச் சொல்வாள். சக்கர வர்த்தியோ தனக்கு ஒரு நற்பண்பு நிறைந்த மகன் பாபாவின் சொற்களால் 'ஓர் உன்னத சீவன்' வருவதை நினைத்து, நினைத்து புளகாங்கிதம் அடைவார்.

இந்த சந்தோஷகரமான செய்தியை வைத்திய கலாநிதிகளுக்கும் தெரிவித்தார். அவர்களோ இதைக் கேட்டு எள்ளி நகையாடினர். *"சாதுக்கள், சுவாமிகளும் மலடிகளைப் பிள்ளை பிறக்க வைப்பாராகில் விஞ்ஞான ரீதியில் வைத்தியம் தேவைப்படாது"* என்றார்கள் .

ஒரு ஜ்ன் மாதம் ஒரு நாள் சககரவர்ததியின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு டாக்டர் பிரதம தாதியுடன் சக்கரவர்த்தி இல்லம் வந்து அவரின் மனைவியை மிகவும் நுணுக்கமாகச் சோதனை இட்டார். டாக்டர் கூறியதாவது:– "மன்னிக்கவும். உங்கள் மனைவி கருத்தரிக்கவில்லை. எல்லாம் வாய்வின் கோளாறு". பிரதம தாதியும் டாக்டரின் தீர்ப்பை ஆமோதித்தார்.

சக்கரவர்த்தி தம்பதிகள் இந்தச் செய்திகளினால் கலவரமடைந்தார்கள். பாபா சொற்படி 'இன்னும் ஐந்தே மாதங்களில் குழந்தை பிறக்க வேண்டும். இப்போ கருவுண்டாகாமல் இருந்தால் குழந்தை எவ்வாறு நவம்பர் மாதம் பிறக்கும்? பாபாவின் மேல் அவர்களுக்கு ஐயம் உண்டாயிற்று.

இது நடந்து ஒரு சில நாள்களில் பாபா டாக்டர் பனார்ஜின் வீட்டிற்கு விஜயம் செய்தார். சக்கர வர்த்தி குடும்பத்தினர் பாபாவின் தரிசனத்திற்கு அங்கு வந்து காத்திருந்தார்கள் என்று சொல்லத் தேவையில்லை. பாபா வந்ததும் அவரின் காலடியில் போய் அமர்ந்தார்கள். அவர்கள் வாய் திறக்குமுன் பாபா டாக்டர்கள் கூறியவைகளை அப்படியே கூறி, *"நீங்கள் கிலேசமடைய வேண்டாம். உங்கள் மகன் 23 ஆம் திகதி நவம்பர் மாதம் உதிப்பான்"* என்றார். சக்கரவர்த்தி குடும்பத்தினர் இதைக் கேட்டதும் தாங்க முடியாத பேரானந்த நிலையில் மிதந்தனர். பாபாவின் பிறந்த புனித நாளில் அல்லவா தங்கள் குமாரன் உதிக்கப் போகிறான்!.

பாபா சக்கரவர்த்தியின் மனைவியை நோக்கி *"நான் சிருஷ்டித்துக் கொடுத்த பதக்கத்தைப் பற்றி சதா குறை கூறிக் கொண்டே இருக்கிறாய். இதோ உன்னுடைய கிருஷ்ண பரமாத்மா. இதை ஏற்றுக் கொள்"* என்று சொல்லி ஒரு பதக்கத்தை அவளுக்கு அளித்தார். பாபா கொடுத்த பதக்கத்தில் ஒரு பக்கம் கிருஷ்ணரும் மறு பக்கத்தில் சீரடி பாபாவின் உருவமும் அமைந்து இருந்தன.

அன்றிரவே சக்கரவர்த்தியின் மனைவி தன் வயிற்றில் குழந்தை அசையும் உணர்ச்சியைப் பெற்றார். இதனால் அவர்களுக்கு குழந்தை உண்டாகியிருப்பது உறுதியாயிற்று.

சந்தேகப் பிராணிகளாகிய டாக்டர்கள் திரும்பவும் அழைக்கப்பட்டனர். சக்கரவர்த்தியின் மனைவியைச் சோதனை செய்தனர். இந்த முறை சோதனையில் குழந்தை உற்பத்தியானதை உறுதி செய்து தங்கள் பிழைக்கும் மன்னிப்புக் கோரினர்.

நவம்பர் 23 ஆம் திகதிக்கு முன்பே சக்கரவர்த்தியின் மனைவி விமானப் படை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 23 ஆம் திகதி நவம்பர் மாதம் வந்தது. அன்று குழந்தை பிறக்கும் அறிகுறி ஒன்றும் தோன்றவில்லை. அவளைச் சோதித்த டாக்டர் பிரசவத்திற்கு இன்னும் சில நாள்கள் செல்லும் என்று கூறி விட்டார்.

குழந்தையை ஆவலோடு எதிர்பார்த்திருந்த தாய்க்கு பெரிய ஏமாற்றமும் கவலையும் ஏற்பட்டது. பாபா பிறந்த அந்நாளில் அல்லவா குழந்தை பிறக்கும் என்று அசையாத நம்பிக்கை வைத்திருந்தாள்? பிற்பகலும் போய் இரவும் வந்தது. இரவு வேலையைப் பொறுப்பேற்கும் தாதியும் நோயாளிகளைப் பொறுப்பு எடுக்கத் தொடங்கினாள்.

மனம் தளர்ந்து கவலை தோய்ந்த முகத்துடனிருக்கும் சக்கரவர்த்தியின் மனைவியைப் பார்த்து *"நீர் எதற்கு உற்சாகமற்று , உலகமே இருண்டு விட்ட மாதிரிக் காட்சி அளிக்கிறீர்?"* என்றாள் .

*"இன்று ஒரு தெய்வீகப் புருர் பிறந்த தினம். இந்த நன்னாளில் எனக்கும் ஓர் ஆண் மகன் கிடைக்குமென்று அவரே ஆசிர்வதித்துள்ளார். ஆனால் டாக்டர்கள் பிள்ளைப் பேறு இன்னும் சில நாள்கள் ஆகும் என்று சொல்லுகிறார்கள்."* – என்றார்.

தாதி அந்த தெய்வீக புருஷர் சத்திய சாயி பாபா என்று அறிந்ததும் *"அந்த மகான் அவ்வாறு கூறியிருந்தால் எதுவித சந்தேகமின்றி குழந்தை இன்றே பிறக்கும். இன்று நாள் முடிய எவ்வளவோ நாழிகையாக இருக்கிறது"* என்று கூறி நோயாளியைப் பிரசவ அறைக்கு அழைத்து சென்று வேண்டிய ஒழுங்குகளைச் செய்தாள். '*நீங்கள் பாபாவின் பக்தையா?' என்ற கேள்விக்கு தாதி "வேறு மதத்தைச் சேர்ந்தவள். ஆனால் பாபாவைப் பற்றி நன்கு கேள்விப் பட்டுள்ளேன். அவர் கடவுளின் தூதுவர். அவர் சொல்வது நடந்தே தீரும்"* என்றாள்.

அன்று பின்னிரவின் போது எதுவித வருத்தமுமில்லாமல் சக்கரவர்த்தியின் மனைவி அழகே உருவெடுத்த ஓர் ஆண் மகனைப் பெற்றெடுத்தாள்.

உரிய நேரத்தில் பாபா தான் கூறியபடி சக்கரவர்த்தி இல்லம் சென்று குழந்தையை ஆசீர்வதித்து 'கிருஷ்ண கிஷேசார்' என்ற நாமத்தைச் சூட்டினார்.

சக்கரவர்த்தி ஓய்வு எடுக்கும் காலம் கிட்டியதும், தான் பாபாவிற்கு சேவை செய்வதே தன் தலையாய கடமை என்று எண்ணி அவரிடம் சென்று தனக்கு ஒரு வேலை தரும்படி மன்றாடினார். பாபாவோ *"பெரிய ஆசாமிக்கு இங்கே என்ன வேலயிருக்கப் போகிறது?"* என்று விகடமாகப் பதில் அளித்தார்.

சக்கரவர்த்தியினரின் குடும்பத்தாரின் தூய அன்பை மதித்து, பயன் கருதாத சேவை செய்யும் மனப்பான்மையை மதித்து, அவரை சத்திய சாயி பாபா கல்லூரி மாணவர் இல்லத்திற்கு மேற்பார்வையாளராக அமர்த்தினார்.

அவரின் அன்பு மைந்தனும் அதே கல்லூரியில் கல்வி கற்று வருகிறான் . அதிர்ஷ்டமும் தெய்வீக அன்பும் நிறைந்த இந்தப் பண்பாளர்கள் பாபாவின் தெய்வீக நிழலிலேயே ஆனந்தமாக வாழ்வை நடத்துகிறார்கள்.

# கொரோனாவிலிருந்து 151 பேர் குணமடைவு

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 151 நோயாளர்கள் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அதனால் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 94 ஆயிரத்து 36 ஆக அதிகரித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 4 ஆயிரத்து 52 கொரோனா நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை நேற்றைய தினம் 672 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில் கொவிட் தொற்றுக்குள்ளான மொத்த நோயாளர்களின் எண்ணிக்கை 98 ஆயிரத்து 722 ஆக உயர்வடைந்தது.

கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 496 பேர் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளதுடன், 634 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கனேவத்த ரயில் நிலையம் மறு அறிவித்தல் வரை முடக்கம்

கொவிட்–19 வைரஸ் தாக்கத்தின் காரணமாக கனேவத்த ரயில் நிலையம் மறு அறிவித்தல் விடுக்கும் வரை மூடப்பட்டுள்ளது. ரயில் நிலையங்களின் சுகாதார பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு பிறகு சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் ஏதும் ரயில் நிலையங்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன சாமர தெரிவித்தார்.

கொவிட் – 19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த ரயில் நிலையங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கொவிட் – 19 வைரஸ் தாக்கம் மீண்டும் பரவலடைந்துள்ளது என சுகாதாரப் தரப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார தரப்பினர் அறிவுறுத்திய சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்களை பொது மக்கள் பெரும்பாலும் பின்பற்றுவது கிடையாது.

பெரும்பாலான பயணிகள் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றாமல் ரயில் போக்குவரத்து சேவையைப் பயன்படுத்துகிறார்கள். கொவிட் – 19 வைரஸ் தாக்கம் மீண்டும் தீவிரமடைந்துள்ளதால் கனேவத்த ரயில் நிலையம் மறு அறிவித்தல் விடுக்கும் வரை மூடப்பட்டுள்ளது.

ரயில் நிலையங்களின் சுகாதாரபாதுகாப்பினைஉறுதிப்படுத்தவும், ரயில் நிலையங்களுக்கு வரும் பயணிகள் சுகாதார வழிமுறைகளைபின்பற்றவும் தேவையான வசதிகளை ரயில்வேத் திணைக்களம் இதுவரையில் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை.கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்திற்கு பிறகு சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. இவ்வாறான நிலையில் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை முழுமையாக கடைப்பிடிப்பது கடினமாகும்.– என்றார்.

FACULTY OF SCIENCE
UNIVERSITY OF JAFFNA

Registration for General/Honours Degree Examinations in Science (Second Semester) - 2019

The above End of Course Examinations are scheduled to be held in May & June 2021. The Examination Timetable is available in the faculty website **http://www.sci.jfn.ac.lk/**.

All the students of the Faculty of Science are requested to register for the above examination on or before 04/05/2021 by filling the online form which is available in the faculty website.

22/04/2021 Registrar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனாவின் காரணமாக மூடப்பட்டது பொலிஸ்நிலையம்

சிலாபம், கொஸ்வத்தை பொலிஸ் நிலையம் நேற்று (வெள்ளிக்கிழமை) காலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை தொடர்ந்து இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் கொஸ்வத்தை பொலிஸ் நிலைய கடமைகள் பிரதேசத்தில் அமைந்துள்ள விகாரையொன்றில் இடம்பெற்று வருகின்றன என அறியமுடிகின்றது.

வேலைக்கு ஆள்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் பிரபலமான புடவைக்கடை & பான்சிக் கடைக்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு கூடிய சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு

021 226 3161
077 711 1001

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை

எமது சேவையூடாக 11 kg க்கு மேல் பொதிகள் அனுப்பும் வாடிக்கையாளர்களுக்கான
மாபெரும் பரிசுப்போட்டி
நீங்களும் வெற்றியாளராகலாம்...

Contact :
021 221 56 56
076 122 15 66
070 330 55 00

பிரான்ஸ், ஜேர்மனி பெல்ஜியம்,
1100/=
(11 kg க்கு மேல்)
டென்மார்க் நெதர்லாந்து

லண்டன்
1000/=
(11 kg க்கு மேல்)

1ம், 2ம், 3ம் பரிசு : 15kg பொதிகள் அனுப்பும் செலவு இலவசம்...
4 முதல் 10 வரை : 3600/=
பெறுமதியான ஆடைகளுக்கான 10L சலவைத்திரவம் 01 இலவசம்...

யாழ்ப்பாணம் | சங்கத்தானை | மல்லாவி
சங்கானை | பளை | மன்னார்
கல்வியங்காடு | கிளிநொச்சி | வவுனியா
ஆவரங்கால் | புதுக்குடியிருப்பு | திருகோணமலை
நெல்லியடி | முல்லைத்தீவு | மட்டக்களப்பு
கைதடி | கனகராயன் குளம் | கொழும்பு

# அரச வங்கி முறைமை வலுவாகப் பராமரிக்கப்படவேண்டும் - பிரதமர்



அரச வங்கி முறைமை வலுவாகப் பராமரிக்கப்பட வேண்டும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று (வெள்ளிக்கிழமை) முற்பகல் நாடாளுமன்ற வளாகத்தி லுள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து குறிப்பிட்டார்.

பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் அதிகாரி களுடன் இடம்பெற்ற விரிவான கலந்துரையாட லொன்றின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நிலவும் சவால் மிகுந்த சூழ்நிலைக்கு மத்தியில் அரச வங்கி முறையை வலுவாக பராமரித்தல் மற்றும் ஊழியர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

1996ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்ட மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஊழியர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு, 2014ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் மீண்டும் பெற்றுக் கொடுத்தமை தொடர்பில் பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் இதன்போது பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷவுக்கு நன்றி பாராட்டினர்.

ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பில் தொடர்ந்து நிலவும் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாகவும் இதன்போது பிரதமரினால் கவனம் செலுத்தப்பட்டது. நிதி அமைச்சர் என்ற ரீதியில் அரச வங்கிகளில் தற் போது நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது பிரதமர் சுட்டிக் காட்டினார்.

குறித்த கலந்துரையாடலில் அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன, இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரல், பிரதமரின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன, பிரதமரின் நாடாளுமன்ற நடவடிக் கைகளுக்கான ஒருங்கிணைப்பு செயலாளர் பிரியந்த ரத்நாயக்க, பிரகதி வங்கி ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் நிசாந்த சமரசிங்க, தலைமை செயலாளர் ஏ.கே.பண்டார உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தொல்பொருள் நாணயக் குற்றிகள் எனக் கூறி விற்பனை செய்ய முயன்ற இளைஞன் கைது



புதையலில் இருந்து கிடைக்கப் பெற்ற தொல்பொருள் நாணயக் குற்றிகள் எனக் கூறி நாணயக் குற்றிகளை விற்பனை செய்ய முயன்ற இளைஞர் ஒருவரை மன்னார் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் கடந்த வியாழக்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்க, உதவி பொலிஸ் அத்தி யட்சகர் கஸ்தூரி ஆராட்சி, மன்னார் மாவட்ட விசேட விசாரணை பிரிவு தற்காலிக பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்படி தொல்பொருள் நாணயம் என கூறப்படும் 257 நாணயக் குற்றிகளை கைப்பற்றியுள்ளதுடன், பெரிய பண்டிவிரிச்சான் பகுதியை சேர்ந்த 23 வயதுடைய சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் வைத்து கடந்த வியாழக்கிழமை மாலை புதையலில் இருந்து கிடைக்கப் பெற்ற தொல்பொருள் நாணயக் குற்றிகள் எனக் கூறி விற்பனை செய்ய முயன்ற போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட குறித்த நபரை மன்னார் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்ற நிலையில் விசாரணையின் பின் குறித்த நபர் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளதோடு, மீட்கப்பட்ட நாணயக்குற்றிகளும் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அமெ. அன்பளிப்புத் தொகை வழங்கல்

கொழும்பு, ஏப்.24

அமெரிக்க அரசாங்கத்தின் தூய்மையான நகரங்கள், நீல பெருங்கடல் நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் முதலாவது அன்பளிப்பு உதவித் தொகையை இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் கடந்த வியாழக் கிழமை அறிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்க தூதரகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

INDIVIDUAL ENGLISH CLASSES

விசேடமாக Grammar With Spoken Practice

25 வருடமாக கொழும்பில் English Language Literature வகுப்புக்கள் நடத்திய ஆசிரியர் தற்போது யாழ் நகரில்.

K.GANESH (BA. Pera)

(G.C.E. O/L, A/L எடுத்தவர்கள், பட்டதாரி மாணவர்கள் (Including English Medium) பட்டதாரிகள், தொழில் புரிவோர் அனைவருக்கும் கற்பிக்கப்படும்.

யாழ். இந்துக்கல்லூரி அருகாமை

நீராவியடி, யாழ்ப்பாணம். 077 766 8725

## புலி உறுப்பினரின் பெயரில் மோசடி செய்தவர் கைது

வவுனியா பிரதேசத்தில் நபரொருவர் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

42 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட நபர் உயிரிழந்த விடுதலைப்புலி அமைப்பின் உறுப்பினர்களின் பெயரில் அடையாள அட்டை மற்றும் போலியான கடவுச்சீட்டுக்களை தயாரித்து நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளார் எனத் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

சந்தேகநபர் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டு வருகிறார் என அவர் தெரிவித்தார்.

## கைதிகளைப் பார்வையிட தற்காலிகமாகத் தடை

இன்று (சனிக்கிழமை) முதல் எதிர் வரும் இரண்டு வாரங்களுக்கு நாட்டின் அனைத்துச் சிறைச்சாலைகளிலும் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகள் ஊடக பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் அதிகரித்துள்ள கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org